"போற்றுபவர் போற்றட்டும்;—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து சொல்வேன்!
ஏற்றதொருகருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர் வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. வெளி நாடு மூன்றணா. காரியாலயம்: 'தென்றல்' சென்னை-14.

மலர் 1	சென்னை 25—9—1954 சனிக்கிழமை	இதழ் 13

ஆளைப் பார்த்துத் தாளைத் திறப்பவள்... அறிக்கையைக் கண்டதும் பத்தினி ஆகிறாள்!

தமிழகத்தில் சுயமரியாதை இயக்கம் என்பதொன்று இருப்பதாகவோ, திராவிடர் இயக்கக் கட்சிகள் இருப்ப தாகவோ, அதை நடத்திச் செல்லும்பெரியார் ஈ.வெ.ரா., அறிஞர் அண்ணாதுரை போன்ற மக்கள் தலைவர்கள் இருப்பதாகவோ பிறர் அறியவொட்டாமல் செய்யும் திருப்பணியில் ஒரு சிறு கூட்டம் மிகவும் கட்டுப்பாடாக ஈடுபட்டிருந்தது; ஈடுபட்டே வருகிறது. 'கைக்குடையால் கதிரவனை எப்படி மறைக்க முடியாதோ,' அதே போல் தேசிய உணர்வோடும் கொள்கை ரீதியாகவும் பரவிவரும்திராவிடர் இயக்கத்தை யாராலும் மறைக்க முடியவில்லை;மறைக்கவும் முடியாது!

இந்த நாட்டிலுள்ள பெரிய பெரிய தினசரி ஏடுகளும், செய்திஸ்தாபனங்களும் பார்ப்பனர்களிடமும் பனியாக்களிடமும் சிக்கிக்கொண்டிருக்கின்றன. திராவிட இயக்க வளர்ச்சிக்குத் துணைபுரியும் எந்தச் செய்தியையும் அவர்கள் பிரசுரிப்பதே கிடையாது. திராவிடர் இயக்கத்தை இருக்குமிடந் தெரியாமல் செய்துவிட வேண்டுமென்று கருதி பணியாற்றும் அந்த 'நல்லவர்கள்' திராவிடர் இயக்க எதிர்ப்பு அணிதிரட்டுவோருக்கெல்லாம் தகுதிக்கு மீறிய விளம்பரம் கொடுத்து அதன் மூலம் திராவிடர் இயக்கத்தை ஒழித்து விடலாம் என்று மனப்பால் குடித்தார்கள். காரிருளைக் கிழித்துக்கொண்டு கதிரவன் புறப்படுவதைப்போல எதிர்ப்பைக் கண்ட இயக்கம், கொள்கைத் தெளிவுடனும் எதிரிகளிடம் முன் எச்சரிக்கையுடனும், இவைகளின் காரணமாக மிகத்தூய்மை பெற்றும் வளரத் தொடங்கிவிட்டது. ஒரு மனிதனுக்கு அதிக எதிர்ப்பு இருக்கிற தென்றால் அவன் எச்சரிக்கையுடன், தவறு செய்யாமல் நடந்து கொள்ளும் வாய்ப்பினை பெற்றுவிடுகிறான். அதைப்போல் அறிவியக்கத்தை சார்ந்தஅனைவரும் எதிர்ப்பில் வளர்ந்தார்கள்—எதிர்ப்பு அவர்களைத் தூய்மைப்படுத்தியது.

அவர்கள் கைமாறு கருதாத கர்மவீரர்கள். யாரிடம்எதைப் பற்றி விவாதித்தாலும், எந்தக் கூட்டத்தில் எந்தப் பொருளைப் பற்றி பேசினாலும் தன் மான இயக்கக் கருத்துக்களுக்கு ஆதரவு தேடாமல் வந்துவிடமாட்டார்கள். நாடு, நகரம், பட்டி, தொட்டி எங்கும் கூட்டங்கூட்டி கொள்கை பரப்பினார்கள். சொற் பயிற்சிக் கூடங்கள் தோற்றுவித்து, சொற்போர் மன்னர்களை உற்பத்தி செய்து, நாட்டின் நானா பக்கங்களிலும் நடமாடச் செய்துவிட்டார்கள். இதன் காரணமாக ஆந்திர மக்கள் கூட அறியாதிருந்த நமது இயக்கத்தை இன்றுஅமெரிக்க மக்களும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த உபகண்டத்தில் பல மாகாணங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மாகாணத்திலும் பல நூறு கட்சிகள் இயங்குகின்றன. என்றாலும் நமது இயக்கத்தைப்போல எந்தக் கட்சியும் இடைவிடாது பிரசாரம் செய்திருக்க முடியாது —பிரசாரம் செய்வதாக நிரூபிக்க முடியாது. இன்று நமது இயக்கம் ஒரு மகத்தான தேசிய இயக்கமாக உருப்பெற்று வருகிறது.

இயக்கத்திற்கும் இயக்கக் கருத்துக்களுக்கும் இவ்வளவு செல்வாக்கு இன்று ஏற்பட்டிருந்தும் கூட பார்ப்பனப்பத்திரிகைகள் மட்டும் நமது இயக்கத்திற்கு விளம்பரம் தர மறுத்து வருகின்றன.

தமிழ் மக்களின் உள்ளங்களிலின்றும் தனிமைப்படுத்த முடியாத ஒரு பலம் பொருந்திய இயக்கத்தை, பார்ப்பன பத்திரிகைகளும், செய்திஸ்தாபனங்களும் மதிக்கவில்லையென்றால் அவர்கள் தமிழர்களை அவமதிக்கிறார்கள்என்றுதான் பொருள் — ஜனநாயக விரோதிகள் என்றுதான்அவர்களைக் கூறவேண்டும்.

தமிழ் மக்களின் உப்பைத் தின்று வளர்ந்த அவர்கள் தமிழர்களையே அவமதிக்கிறார்கள் என்றால் இதை சகிக்க முடியுமோ? இதைவிட மானக்கேடு வேறென்ன? இந்த உபகண்டத்தில் தமிழன் தலைநிமிர்ந்து வழ முடியாத அளவுக்கு ஒதுக்கி வந்திருக்கிறார்கள்.

தமிழகத்திலே தமிழர்களின் உதவியால், வளர்ந்து செல்வாக்குடன் நடக்கும் 'ஹிந்து', 'சுதேசமித்திரன்', 'எக்ஸ்பிரஸ்', 'தினமணி' போன்ற பத்திரிகைகளில் தமிழர்களின் பேச்சுக்கு இடமளிக்க மாட்டார்கள். சிறிது இடமளித்தாலும் முக்கியத்துவம் அளிக்கவே மாட்டார்கள். அந்தப் பத்திரிகைகள் இன்றும் தமிழகத்தில் வாழ்கின்றன. எத்தனை நாட்களுக்கு வாழ முடியும்? இந்த கேள்வி தமிழர் மத்தியில் எழத்தான் போகிறது. தமிழன் தன் மானத்தோடு வாழ நினைத்தால்—அதற்கு செயலாற்றினால் இருட்டடிப்பு! பார்ப்பனர்களுக்கு பாத சேவை செய்யும் "மரத்தமிழர்"களுக்கு தகுதிக்கு மீறிய விளம்பரம்!

பெரியார் பேசினார், அண்ணாதுரை பேசினார் என்பதை நாட்டில் நடமாடும் நல்லினைஞர் உதவியால் தான் அறிய முடியுமே தவிர 'ஹிந்து', 'எக்ஸ்பிரஸ் ஏடுகளில்பார்த்து விட முடியாது. அவ்வளவு கட்டுப்பாடாக' இரட்டடிப்பு

(2-ம் பக்கம் பார்க்க)

எண்ணம்

"புதிய கல்வித் திட்டம் போய்விட்டது; போய்விட்டது" என்று எண்ணினோம். "இல்லை. அது போகவில்லை; வாலியைக் கொன்ற ராமன் போல் மறைந்திருக்கிறது." என்கிறார் நிதி அமைச்சர், சுப்பிரமணியம். கடந்த ஆட்சியாளர்களின் பெருந் தவற்றில் விளைந்த கல்வி திட்டத்தை புதிய பிரதமர் ஒழித்துவிட்டார் என்றெண்ணினோம்; "இல்லை. புதிய பிரதமர் அதைத் திரைபோட்டு மூடி வைத்திருக்கிறார்" என்கிறார் சுப்பிரமணியம்.

* * *

சிறு பிள்ளைகளின் கண்ணாமூச்சி விளையாட்டை நிதியமைச்சர் விளையாடிப் பார்க்கிறார். ஆச்சாரியார் தோற்ற இடத்திலே அவரது சீடர் சவால் விடுகிறார். "வேண்டாம் இந்த விபரீத புத்தி!" என்று அவரை எச்சரிக்க ஆசைப்படுகிறோம். அக்ரகாரத்துக்கு இல்லாத அக்கரை, இந்த, பூனூல் போடாத பார்ப்பனருக்கு இருப்பதைக் காண வெட்கப்படுகிறோம்." என் குழந்தையை நானே கொல்வேன்; என் குடும்பத்தை நானே அழிப்பேன்" என்பது போல் "கல்வித் திட்டம் கொண்டு வரப்படும்; வர்ணாசிரம முறை புகுத்தப்படும்" என்று அறிவிக்கிறார். உள்ளுக்குள்ளே என்ன பேரம் நடக்கிறதோ நமக்குப் புரியவில்லை. குலதர்மக் கல்வித் திட்டம் கொண்டு வரப்படுவதன் மூலம் பாழ்படுத்தப்படுகிற குழந்தைகளிலிருந்து சுப்பிரமணியத்தின் வாரிசுகள் தப்ப முடியாது; "நான் ஆச்சாரியாரின் பாதந் தாங்கி. ஆகவே என் குழந்தை மேல் சாதிதான்" என்று சுப்பிரமணியம் வாதிட முடியாது இரண்டணாவுக்கு பூனூல் வாங்கித் தோளிலே போட்டுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்று, 'பிராமணாள்' ஆகிவிட முடியாது. சூத்திரன் தாசி மகன் என்ற பட்டங்களிலிருந்து தப்பிவிட முடியாது. சுப்பிரமணியத்தின் மறுமுயற்சி, அவர் தன்னை சூத்திரனாக, ஒப்புக்கொள்கிறார் என்பதைத் தான் காட்டுகிறது. மானம் இல்லாவிட்டாலும் மனிதன் வாழ முடியும் என்பது அவரது பழக்கமாயிருக்கலாம்; திராவிட சமுதாயத்தில் பகுத்தறிவு வரப் பெற்ற மக்கள் எவரும் அதை ஒப்புக் கொள்ளமாட்டார்கள்.

* * *

"திராவிடர்கள் படித்து விடுகிறார்கள். படித்ததும்கேள்வி கேட்டுக் கொல்லுகிறார்கள். கேள்விகளுக்கு பதில் கூறித் தன்னைக் காத்துக் கொள்ள, வேத சாத்திரங்களால் இயலவில்லை. ஆயிரக்கணக்கான ஆண்டவர்கள் அதிலே அடிபட்டுப் போகிறார்கள். பார்ப்பனச் சாதி வாழ்விழந்து விடுகிறது. இதை தடுக்க வேண்டுமானால், இதுதான் சரி" என்று தீர்மானித்துத்தான் ஆச்சாரியார் புதிய கல்வி திட்டத்தை உருவாக்கினார். பைசா அளவு மூளையுள்ள எவரும்கூட இதை மறுக்கமாட்டார்கள். ஆச்சாரியாரிடத்தில் உள்ள பாசமோ அக்ரகாரத்திலுள்ள ஆசையோதான் அவரை இந்த மறுமுயற்சிக்குத் தூண்டியிருக்கிறது என்றால், விவஸ்தையற்ற பாசத்துக்காக ஒரு பெரிய தொன்மையான சமுதாயத்தை, சிறுபான்மையினருக்கு அடிமைப்படுத்துவதை எந்தத் தமிழனும் சகிக்கமாட்டான். 'நம் நாடு' கூறியது போல், "புதிய கல்வித் திட்டம் ஒழிக்கப்படவில்லை; ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது" என்றால், "நமது அறப்போரும் கைவிடப் படவில்லை; ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது" என்றே நாமும் கூற ஆசைப்படுகிறோம்.

* * *

வீட்டை காடாக்கி வேட்டையாட நினைப்பவர்கள் தூக்கி எறியப்படுவார்கள். அரசியலில் எதேச்சை மனப்பான்மை தோன்றுவதை ஜனநாயகம் பொறுக்காது. சுப்பிரமணியம் பதவியோடு பிறந்தவர் அல்ல. இது அவருக்கு எழுதி வைக்கப்பட்ட சாசனமும் அல்ல தன்னை மறந்து கூத்தாடுகிற பண்பு, இவரிடம் இருப்பது கண்டு பரிதாபப்படுகிறோம். மீண்டும் கல்வி திட்டத்தைக் கொண்டு வர முயன்றால் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னைப் பணயம் வைத்து அதை எதிர்க்கும்; போராடும்.

* * *

ஆச்சாரியார், "கழுதைக்கு மூன்று கால்" என்றால் "ஆமாம்! இரண்டு இறக்கையும் உண்டு" என்பவர் சுப்பிரமணியம். திராவிட சமுதாயத்திற்கு அவர் ஒரு களங்கம்பொதுமக்கள் நன்றாகப்புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

இறுதியாககூறுகிறோம் "முன்னேற்றக் கழகத்தின்லட்சம் தொண்டர்களும் கொல்லப்பட்ட இடத்திலேதான் புதிய கல்வி திட்டம் மீண்டும் தோன்ற முடியும். மிச்சமிருக்கிற அனுதாபிகளும் அதைக் கடுமையாக எதிர்ப்பர். சுப்பிரமணியம் இதை விரும்புகிறாரா? காமராசரை வம்பிலே மாட்டி வைக்க அவர் நினைக்கிறாரா?" பலவினக் கட்சி இதைக் கூறவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் கூறுகிறது! ஆம்; திமிரோடு கூறுகிறேன்; திராவிட முன்னேற்ற கழகம் எச்சரிக்கிறது!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்கிறார்கள். அதே நேரத்தில் மயிலாப்பூர் ரானடே ஹாலிலோ, லக்ஷ்மிபுரம் யுவர் சங்கத்திலோ ஒரு கூட்டம் நடந்தால் அதிக விளம்பரம் தருவார்கள். ஒரு ராமசாமி சாஸ்திரியோ, பாலசுப்பிரமணிய அய்யரோ பேசினால் அந்த அபத்தத்தைபார்ப்பனப் பத்திரிகைகள் பத்திபத்தியாக பிரசுரித்துவிடும்!

பெரியாரோ, அண்ணாவோ மற்றும் இயக்கத் தலைவர்களோ சென்னையை விட்டுத் தூத்துக்குடி போகிறார்கள் என்றால் எந்தப் பத்திரிகையிலும் அது பற்றியசெய்தியைப் பார்த்துவிட முடியாது. அதே நேரத்தில் ஒரு ஆர். வெங்கடராமனோ, ஒரு ராமசாமி சாஸ்திரியோ சென்னையை விட்டு வேறொரு ஊருக்குப்போனால் உடனே 'ஹிந்து' அதனை விடாமல் பிரசுரித்து விடும். தமிழர்களை, தமிழர் தலைவர்களை எந்த அளவுக்கு அவர்கள் கேவலமாக நடத்துகிறார்கள் என்பதை நினைத்தாலே நெஞ்சு கொதிக்கிறது.

திராவிடர் இயக்கத்தை மட்டுமே இருட்டடிப்பு செய்கிறார்கள் என்று கருத முடியாது. எந்த இயக்கத்தவராயினும் எந்தக் கட்சியைச் சார்ந்தவராயினும் அவர்கள் திராவிடரானால்—தமிழரானால் அவர்களுக்கு நிச்சயமாக விளம்பரமளிக்கமாட்டார்கள். திராவிடர் இயக்கத்தைச் சாராத இதர கட்சி பிரமுகரான ஜீவானந்தமாயினும் முத்துராமலிங்கத் தேவரானாலும் வேறு எவரானாலும் அவர்கள் பார்ப்பன அடி வருடாத திராவிடர்களானால் நிச்சயமாக அவர்களுக்கு விளம்பரமளிக்கமாட்டார்கள். காங்கிரஸ்ஸ்தாபனத்தை தமிழகத்தில் பரப்பிய திரு. வி. க. வுக்கும் டாக்டர் வரதராஜலு நாயுடு போன்றவர்களுக்கும் இருட்டடிப்பு என்றால் மற்றவர்கள் நிலையை விளக்க வேண்டுமா?

இத்தகைய ஜாதிவெறி—இனவெறி பிடித்தலையும் அந்தப் பார்ப்பன பத்திராதிபர்கள்தான் ஜனநாயகத்தைப் பற்றியும், பத்திரிகை சுதந்திரம் பற்றியும், பத்திரிகாதர்மம் பற்றியும், வகுப்பு வாதத்தை ஒழிப்பது பற்றியும் வாய் கிழியப்பேசுகிறார்கள்! பேனா முறிய எழுதித்தள்ளுகிறார்கள்!

'நாதன்'

புதிய உருவில்

கலைமன்றம்

'கலைமன்றம்' திராவிடர் வார ஏடு, 2-10-54 முதல் டெம்மி 1X16 அளவில் புதிய உருவம் தாங்கி, அதிக பக்கங்களுடன் பெரும் எழுத்தாளர்களின் படைப்புகளை ஏந்தி வெளிவருகிறது.

முதல் இதழைப் பிரித்தால் இருப்பவை எமிலி ஜோலாவின் சிறுகதை! பைரனின் வாழ்க்கை! உள்ளத்தைத்தொடும் ஓரங்க நாடகம்! இன்னும் பலப்பல சுவையான கட்டுரைகள், சிறு கதைகள், கவிதைகள்!

9-10-54 முதல் "**அக்கினிக்கோபம்**" என்ற சரித்திரப் பெரும் தொடர்கதை ஆரம்பமாகிறது.

மூவர்ணமுகப்பிலே இலக்கியச் சித்திரங்களைக் கொண்டு வெளிவரும் '**கலைமன்றம்**' விலை அணா நான்கு தான்!

அதிகப்பிரதிகள் வேண்டுமானால் ஏஜண்டுகள் முன் கூட்டியே தெரியபடுத்த வேண்டும், முன் பணத்துடன்.

தொடரவிருக்கும் வாசகர்கள் அக்டோபர் மாதத்திற்குள் சந்தாதாரராய் சேர்ந்துகொள்ளவேண்டும்.

நிர்வாகி,
கலைமன்றம்
த. பெ. எண். 275
சென்னை-1.

பெரும்பயணம்

கடந்த 14-8-54-ந் தேதி இதழ் வரையில், திராவிடம் வாழ்ந்த கதையும், ஆரியர்கள் வந்த கதையும், அதன்பின் தாயகம் தாழ்ந்த நிலையும், அது பொறுக்கமாட்டாமல், பெரியார் ராமசாமி தென் இந்திய நல உரிமைச் சங்கத்தில் சேர்ந்த கதையும் கூறினேன்.

கண்ணதாசன்

அதில், "தென் இந்திய நலச்சங்கம் கண்டனர்" என்றிருப்பது, "சங்கம் சேர்ந்தனர்" என்றிருக்க வேண்டும். பெரியார் காங்கிரஸில் இருந்தபோதே அந்தச் சங்கம் இருந்திருக்கிறது. இந்த இதழில் அந்தச் சங்கத்தின் வளர்ச்சி கண்டு பார்ப்பனர்கள் பதறியது கூறப்படுகிறது; திராவிடரே நம்மைச்சாடியது குறிப்பிடப் படுகிறது!

'காதி' ஆடைகள் அணியுங்காட்சியே
கண் நிறைந்த காட்சியென்றெண்ணியும்
சாதி ஆயிரம் வாழ்கிறபோதிலும்
தாயர் 'பாரததேவி' யென்றெண்ணியும்
வேதியர் அடி வீழ்வதொன்றுதான்
மெய்ப்புகழ் தரும் வேலையென்றெண்ணியும்
ஓதி வாழ்ந்தவர் உண்மைகண்டு, அவ்
உண்மை கூற நற்சங்கம் சேர்ந்தனர்!

* *

மூட்டை தூக்கிக் கதர்த்துணி விற்றவர்
முழுபொருள் உடல் அர்ப்பணித்தவர்
"வேட்டை வெள்ளையனே வெளியே" றென
வெஞ்சினத்தொடும் சமர் தொடுத்தவர்
பாட்டை நீங்கி "காங்கிரஸ் இனி
பார்ப்பனக்குலக்கட்சிதான்! பெரும்
கேட்டை நம்மவர் காணுமுன்னே அதைக்
கிள்ளி வீசுவோம்!" என்றெழுந்தாரரோ!

* * *

"கைம்முதல் ஒரு துளியும் இன்றியே
கணக்கில்லாத் தொழில் புரியும் ஆரிய!
எம்முதல் கொடு இங்கு வந்தீர்?" என
இடித்துக் கேட்கவும், தென்னகத்தொன்மையர்
தம்முதல் பறிபோகுந் தன்மையைத்
தடுத்திருத்தவும், தாய்த்திரு நாட்டினர்
விம்முங் காட்சியிலாது விளங்கவும்
வீரர்காள்! "எழுவீர்" எனப்பாடினர்!

* * *

புத்தர் செய்த புரட்சியும், "ஆரியம்
பொய்யடா! மறை பொய்யடா! அவை
இத்தரைதனில் இழிந்தகொள்கையர்
எழுதிவைத்தவடா!" எனச்
சத்தமிட்ட கபிலனின் பாதையும்
தனிப்பெருந் திருமூலர் தம் பாடலும்
சித்தர் சொன்னதும் திரும்பக் கூறிய
திராவிடர் உளில் தெளிவு தந்தாரரோ!

நீண்ட காலம் தடையெதுமின்றியே
நினைத்தயாவையும் கொண்டியன் வாழ்ந்தது
மாண்டு போகுமென்றஞ்சிய ஆரியர்
வாய் இழித்து கூக்குரலிட்டனர்!
"ஆண்டவன் இலையாம்! அட நாத்திகா!
அழிந்துபோகுமடா புவி! தில்லையின்
தாண்டவன் உனைச் சாம்பலாக்குவான்!
சாத்திரத்தை இகழ்ந்திட்டேல்!" என்றனர்

* * *

ஊறி ஊறி உடலெலாம் ஊறியே
உலக மூடத்தனங்களின் வீடுபோல்
நாறி நாறி நாற்றமே மீதுற
நடுங்கி வாழ்ந்த திராவிடரும், அவர்
மாறி மாறிச் சொன்ன சொல் கேட்டனர்
வாழ வைக்க வந்த நல்லோர்களை
சீறி ஓடித் தாக்கினர்! ஆரியத்
தீயர் வாயிதழ் புன்னகை பூத்தன!

* * *

சத்தியமூர்த்தியார்: வ. வெ. சு. ஐயர்
சதிச்செயல் புரி ராஜகோபாலரும்
வித்தகர் சுப்பிரமணிய ஐயரும்
விஷம்படைத்த பார்ப்பனர் யாவரும்
கொத்தித்தின்று போடுதல் போல நற்
கொள்கையாளர் பால் சீறி எழுந்தனர்!
அத்தனைக்கும் கலங்கிலர்! பெரியவர்!
அடுத்தடுத்து மடமையைச் சாடினர்!

* * *

ஒன்று பத்தெனப்பத்து நூறென
உண்மை கண்டவர் ஓடி வந்தனர்
கன்று வந்ததும் தாவிச் சேர்தல்போல்
கனிவு காட்டி அணைத்தனர் பெரியவர்!
"இன்று சூத்திரன்! ஆத்திரம் கொண்டு நாம்
எழுந்த காலையிற் சாத்திரம் தீயிலே!
நன்று காணுவோம்!" என்ற நற்பல்லவி
நாடுமுற்றிலும் எதிரொலித்ததே!

'தென்ற'லில்

விரைவில் ஆரம்பமாகிறது

'கண்ணதாசன்'

எழுதும்

"ஆயிரம் தீவு அங்கயற்கண்ணி"

(தொடர் கதை)

மனித நடமாட்டம் இல்லாத ஒரு தீவிற்கு அருகில், சோழ மன்னனின் கப்பல் ஒன்று தரை தட்டியது. கப்பலில் இருந்தவர்கள் தீவில் இறங்கினர்கள். அங்கே மூன்று அழகிய பெண்கள், ஒரு அலங்கார மாளிகையில் சிறை வைக்கப்பட்டிருந்தார்கள். பிறகு.........?

-படியுங்கள்; சுவை புரியும்!

அந்த சோழ மன்னனோடு ஒரு தமிழ்ப் புலவனும் போகிறான்!

உங்களூர் ஏஜன்டிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்
'பைண்டு' செய்வதற்குத் தோதான முறையில் பக்கங்கள் அச்சிடப்படுகின்றன

'தென்றல்' தனி இதழ் 2 அணாத்தான்!

கட்டபொம்மன்

சென்ற இதழ் தொடர்ச்சி

காட்சி 16

(கட்டபொம்மனின் தனியறை—சிந்தனைச் சுழல்களிடையே)

மனம்: வீரபாண்டியா! என்ன சிந்திக்கின்றாய்? உனது வலது கரம் அல்லவா? தானாபதிபிள்ளை. எங்கே அவர்? ஜாக்ஸனிடம் அகப்பட்டுக்கொண்ட அவரைக் காப்பாற்ற வேண்டாம்!

கட்டபொம்மன்: ஆம்! கட்டாயம் காப்பாற்றப்படத்தான் வேண்டும். இதோ புறப்படுகின்றேன்!

மனம்: மறுபடியும் போருக்குச் செல்ல எண்ணுகின்றாயா? அதற்குள் தூக்கு மேடையில் தானாதிபதிபிள்ளை தொங்கிக் கொண்டிருக்க நேர்ந்தால்......தொங்கவிடப்பட்டால்.

கட்டபொம்மன்: என்ன செய்யலாம்.........நேர்மைக்கு மதிப்பு அளிக்காதவர்களிடம் போரைத்தானே மேற்கொள்ள வேண்டும்.

மனம். இல்லை.......உயிர்த்துடிப்பிலே உன் செயல் இருக்கின்றது. டேவிட்சன் துரை உன் நண்பரல்லவா? வெள்ளையர் தம் அன்பரல்லவா? அவரிடம் செல்! தானாதிபதியை மீட்கலாம்! மேன்மை பெறலாம்! நண்பர்களிடம் செல்வதில் நாணப்படத்தக்கது என்னவிருக்கிறது......உற்றுழியுதவுபவர்கள் அல்லவா நண்பர்கள்......தயங்காதே தனித்தே செல்! விரைந்து செல்.......

கட்டபொம்மன்: ஆம் செல்லுகின்றேன்......இல்லை இல்லை... டேவிசன் துரைக்கு இந்த நிலைமை குறித்து கடிதம் எழுதுகின்றேன்...(ஏடும்எழுத்தாணியும் எடுத்து) அன்புள்ளடேவிசன்...

காட்சி 17

(கட்டபொம்மன் அவை—வெள்ளைத் துரை டேவிசன் உள்ளே புகுகின்றார்.)

டேவிசன்: வேந்தே......!

கட்டபொம்மன்: வாரும் நண்பரே! வாரும்!

டேவிசன்: கடிதம் கண்டேன், கடிதோடி வந்தேன்; காரியம் என்ன வேந்தே?

கட்டபொம்மன்: ஒன்றும் இல்லை......! நண்பரே!...

டேவிசன்: கவலை தோய்ந்த முகம், கருத்துணர்த்தும் பார்வை... இவை எதையோ காட்டுவதாக அறிகின்றேன்...

கட்டபொம்மன்: ஆம்! தானாதிபதி பிள்ளையை அந்த சேனாதிபதி பிடித்துக்...

டேவிசன்: கைதுசெய்து காவலில் வைத்திருக்கும் செய்தியறிந்தேன். கவலை வேண்டாம். விட்டுவிடுங்கள் கவலையை. தானாதிபதியின் தலையைக் காப்பது என் பொறுப்பு. அருங்குணம் நிறைந்த உங்களை அறியாது போயினர். கம்பெனித் தலைவருக்கு இதோ...! இப்போதே கடிதம் எழுதி ஜாக்ஸனின் கண்ணியமற்ற தன்மையை எடுத்துணர்த்துகின்றேன். தார் வேந்தன் தரமறியாது தடுமாறிய ஜாக்ஸன் தகுந்த தண்டனை பெறும் படி செய்கின்றேன்.

கட்டபொம்மன்: நண்பரிடம் அந்த உதவியைப் பெறுதல் நலமென்றெண்ணியே அழைத்தேன். உதவியை உறுதியாகச் செய்யவேண்டும்!

டேவிசன்: உறுதியாகச் செய்வேன்...தானாதிபதிக்கு விடுதலை... ஜாக்ஸனுக்கு தண்டனை...

காட்சி 18

(சாலை வழியிலே ஜாக்ஸன் துரை...)

ஜாக்ஸன்: தானாதிபதிக்கு விடுதலையாம்...விருந்தாம்..வெகுமானமாம்...ஜாக்ஸனுக்கு தண்டனையாம்—வேலைக்குத் தகுதியில்லையாம்—தள்ளி விடுகின்றார்களாம்...யாரை? இந்த ஜாக்ஸனையா? (சிரித்தல்) அடிப்பது கொள்ளை! செய்வது அநியாயம். கூறுவது நீதி—நீதியின் பெயரால் நான் குற்றவாளி—தர்ம நியாயம் தரணிக்கெல்லாம் வழங்கும் தயாநிதிகள்! தரும பிரபுக்கள்...!

அன்னியர் தம் நாட்டை அடிமைப்படுத்த — வணிகத்துறையை வளம்படுத்த—அல்லும் பகலும் அயராது உழைத்தேனே—அதற்குத் தண்டனை பதவி இல்லை—பறித்துக்கொள்கின்றார்களாம் ... உழைத்தவனுக்கு உயர்வு இல்லை ... ஜாக்ஸனுக்கு இனி இடமில்லை...கலெக்டர் வாஷிங்டன். (சிரித்தல்) நாயக்கர் குற்றவாளி இல்லையாம்! ஜாக்ஸன் குற்றவாளியாம்! யாருக்குத் தெரியாது......அடிப்பது கொள்ளை பார்ப்பது பாவ புண்ணியம்...அன்னிய நாட்டை ஆளநினைப்பது குற்றமில்லை—அவர்களைச் சிறையிலே அடைப்பது குற்றமில்லை. வணிகம் புரிவதாகக் கூறி அவர்தம் வளமெலாம் சுரண்டுவது குற்றமில்லை. ....எல்லாம் ஏமாற்று வித்தை...டேவிசன் கடிதம் எழுதினாராம் ...அந்தத்தியாக சீலர் அமைதியை நிலைநாட்டுகின்றாராம் ஐயாயிரம் மைல்களுக்கு அப்பால்தான் உங்கள் அநீதி என்றால் இங்குமா உங்கள் அநீதிக்கு ஆட்சிப்பீடம்! இங்குமா உங்கள் அட்டகாசம்...ஜாக்ஸனுக்கு பதவி இல்லையாம்—வேண்டாம் உங்கள் பதவி; வாஷிங்டன் கலெக்டர்—வாஷிங்டனே வந்தாலும் வரட்டும்...தானாதிபதிக்கு விடுதலை...

காட்சி 19.

[கட்டபொம்மன் அவை-விடுதலைபெற்றுவந்த தானாதிபதியை சந்திக்கின்றான் வீரபாண்டியன்]

கட்டபொம்மன்: விடுதலை பெற்ற உமது கட்சி வெள்ளையர் தம் பண்பின் விளக்கமாயிருக்கிறது...வெள்ளையரும் நல்லவர்தான்...உள்ளம் மகிழ உமக்கு விடுதலை யளித்த அந்த நல்லவர்களை நான் போற்றுகின்றேன். வெள்ளையர் தம் உள்ளமும் வெள்ளைதான்...

தானாதிபதி: இல்லை வேந்தே! வெள்ளையர்கள் கள்ளம் நிறைந்தவர்கள்...நல்லவர்களாய் நடித்து நம்மை நாசவலையால் பிடித்து விடுவார்கள்.

கட்டபொம்மன்: ஒப்புக்கொள்கின்றேன் ஆனால்...கவனமும் கண்ணியமும் நிறைந்தவர்கள் என்பதையும் ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும்...

தானாதிபதி: வீரத்தில் மிஞ்சியவர்கள்...

கட்டபொம்மன்: இல்லை என்றாலும்...விவேகத்தில் மிஞ்சியவர்கள் அல்லவா?

ஊமைத்துரை: அண்ணா! தன்மானத்திற்காகப் போராடும் தமிழ் மறவர் நாடு நாம் தங்கியிருக்கும் தமிழ்நாடு. மயிர் நீப்பின் வாழாக் கவரிமாவன்னார் வாழ்கின்றனர் இங்கே...

கட்டபொம்மன்: அவர்கள் மட்டுமல்ல தம்பீ! காட்டிக் கொடுப்பதற்காகப் பேட்டி சாணசெல்லும் கயவர்களும் இங்குதான் வாழ்கின்றனர்.

வெள்ளையத்தேவன்: என்ன இருந்தாலும் அன்னிய நாட்டானுக்கு இந்நாட்டில் ஆட்சியா?

ஊமைத்துரை: அவமானமாயிருக்கிறது...

வெள்ளையத்தேவன்: அவர்களின் அதிகாரம்—ஆணவம்—அடக்குமுறை அனைத்தும்,

ஊமைத்துரை: அழிக்கப்படவேண்டும்...ஆனால்...மிஞ்சினால் கெஞ்சும் பஞ்சைகள்...

கட்டபொம்மன்: அந்த வஞ்சகர் கூட்டம் வாழ்ந்து போகட்டும். கெஞ்சிக் கூத்தாடும்வரை தஞ்சம் அளிப்போம் மிஞ்சினால்...

[இந்த சமயத்தில் தூதனொருவன் உள்ளே புகுதல்]

(9-ம் பக்கம் பார்க்க)

தொடர் கதை

காதலோ காதல்!

எமிலிஜோலா

அத்தியாயம் 1

லயான்ஸ் ரயில்வே நிலையத்தில் தனது மூன்று பெட்டிகளுடன் வந்திறங்குகிறான் ஆக்டேவ் மௌராட். தான் போகவேண்டிய இடத்தின் விலாசத்தைச் சொல்லிவிட்டு, பெட்டிகளுடன் டாக்ஸியில் ஏறி அமர்ந்தான்.

நவம்பர் மாதத்து பிற்பகல். வெளிச்சம் மங்கலாக இருந்தது. கண்ணாடி ஜன்னல்களை திறந்து விட்டு வெளியே கவனித்தான், ஆக்டேவ். காற்று ஜில்லென்று வீசியது!

டாக்ஸிகாரன் ஒரு பெரிய தெருவில் கொண்டு வந்து நிறுத்தினான். வெளியே கவனித்த ஆக்டேவ்,

“இந்த இடமில்லையப்பா... அடுத்த சந்துக்குத் திருப்பு. திரும்பியவுடன் நேராக எதிரில் தெரியும், நாலடுக்கு மாளிகைதான், நான் இறங்க வேண்டிய இடம்” என்றான் டிரைவரிடம்.

அடுத்த நிமிஷம் வண்டி ஆக்டேவ் சொன்ன இடத்தில் வந்து நின்றது.

பெரிய வீடுதான். நான்கு மாடிகள். புதிதாக கட்டப்பட்டிருந்தாலும், பக்கத்திலிருந்த சூழ் நிலைகளினால் கொஞ்சம் பழையதாகத் தெரிந்தது.

ஆக்டேவ், காரை விட்டு இறங்கும்போது. வீட்டிற்குள்ளிலிருந்து ஒருவர் வெளியே வந்தார். ஆக்டேவைக் கண்டவுடன் அவர் மிகவும் ஆச்சரியப்பட்டுப் போய்விட்டார் என்பதை அவர் முகம் காண்பித்தது. “நீங்களா? இங்கேயா? உங்களை நான் நாளைக்குத்தானே எதிர்பார்த்தேன்!” என்றார் வீட்டுக் குள்ளிருந்து வந்தவர்.

“நான் ஒருதினம் முன்னால் புறப்பட்டு விட்டேன், என் ஊரிலிருந்து. அதனால்தான்! ஏன், என் அறை தயாராக இருக்கிறதல்லவா?” என்றான் ஆக்டேவ் சந்தேகத்தோடு.

“இரண்டு வாரங்களுக்கு முன்னமே, அறையை தயார் செய்து, நீங்கள் சொன்ன பிரகாரம் அலங்காரமும் செய்து வைத்திருக்கிறேன். வாருங்கள் உள்ளே போகலாம்!”

ஆக்டேவ் பெட்டிகளை வாங்கி வைத்துக்கொண்டு டாக்ஸிகாரனை அனுப்பினான்.

வீட்டிலிருந்து வெளிவந்த நபர் மீண்டும் உள்ளே நுழைந்தார். முன்னால் வேலைக்காரர்கள் அறைக்கு பக்கத்திலிருந்த வராந்தாவில், ஒரு கனவான் நின்று பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். பெட்டிகள் உள்ளே வந்ததால் அவர் கவனம் திரும்பியது.

உள்ளே நுழைந்த பழையவரைக் கண்டு,

“இவர்தான் நீங்கள் சொன்ன நபரா, மிஸ்டர் காம்பர்டன்?” என்றார்.

“ஆமாம், மௌராட், இவர்தான் ஆக்டேவ் மௌராட். என் மனைவியின் சொந்தக்காரர்களின் சிநேகிதர். இங்குதான் தங்குகிறார். எங்களுடன்தான் சாப்பாடு.” என்றார் காம்பர்டன். அவர்தான் இவ்வளவு பெரிய வீட்டின் நிர்வாகி—மேஸ்திரி.

ஆக்டேவ் இப்படியும், அப்படியுமாக பார்த்துக் கொண்டே உள்ளே வந்தான். வீடு நன்றாக இருந்தது; அவனுக்குப் பிடித்திருந்தது.

“நல்ல இடம்” என்றான், நிர்வாகியிடம் ஆக்டேவ்.

“ஆமாம்! இடம் நன்றாக இருப்பதனால்தான் கௌரவம் மிக்கபிரஜைகளும், இங்கு குடியிருக்கிறார்கள்!” என்றார்.

அவர் பேசியதின் கருத்தை புரிந்துகொள்ள ஆக்டேவ், சிரமப்பட்டுக் கொள்ளவில்லை.

மாடிப்படியே ஆக்டேவை ஆகர்ஷித்து விட்டது. அவ்வளவு நல்ல இடமாக—பெரிய மனிதர்கள் வசிக்கும், இடமாக—அவனுக்கும் கிடைத்துவிட்டதில் மிகவும் சந்தோசந்தான்.

காம்பர்டன், அவன் அறைக்கு வழிகாட்டிக் கொண்டு முன்னால் நடக்க, அவரைப் பின் தொடர்ந்தான் ஆக்டேவ்.

போகும் வழியில், எதிரில் திறந்திருந்த ஒரு அறையை அவன் கண்கள் கவனித்தன. இளம் பெண்ணொருத்தி, தொட்டிலை ஆட்டிக்கொண்டிருந்தாள். நடக்கும் சப்தம் கேட்டு அவள் திரும்பிப் பார்த்தாள். சுமாரான அழகி! கண்களில் ஏதோ கொஞ்சம் கவர்ச்சியிருந்தது-ஒளி அதிகமில்லை. அவள் உருவம் அவன் மனதில் பதிந்து விட்டது. அவன் தன்னை பார்த்து விட்டதை அறிந்த அவள், கதவருகில் வந்து, அதை மூடினாள் வெட்கத்தோடு.

தயங்கித் தயங்கி ஆக்டேவ் மேலே நடந்தான். கடைசியாக நிர்வாகி ஒரு இடத்தில் நின்றார். அதற்கு மேலும் நடந்து போனால், வேலைக்காரர்கள் வசிக்கும் அறைகளுக்குத்தான் போக வேண்டும்.

“இந்த இடந்தான்!” என்றார் காம்பர் டன் எதிரிலிருந்த அறையைக் காட்டி.

ஆக்டேவ் தன் அறையைக் கவனித்தான். அது மிகவும் விசாலமாகவும், பெரிதாகவும் இருந்தது. சுவரெல்லாம் காகிதம் ஒட்டப்பட்டு, அழகாக இருந்தது. காகிதப் பூக்கள், மூலையில் காட்சியளித்தன.

“நான் இங்கு மிகவும் சௌகர்யமாக இருப்பேன்!” என்றான் ஆக்டேவ்.

“நானும் அப்படித்தான் நினைத்தேன்!” என்றார் மேஸ்திரி.

கடைசியில் வழக்கப்படி,

“என்னால் உங்களுக்கு மிகவும் சிரமம். தயவு செய்து அதற்காக மன்னித்து விடுங்கள்” என்றான் ஆக்டேவ், காம்பர்டனிடம்.

“பரவாயில்லை... இதனாலென்ன? அதிருக்கட்டும், ஒரு விஷயம் உங்களிடம் சொல்லவேண்டும்! இங்கு சண்டை சச்சரவு எதுவும் கூடாது. பெண்களை—விலைமாதர்களை — வெளியிலிருந்து இங்கெல்லாம் கொண்டு வரக் கூடாது! அப்படி நீங்கள் ஏதாவது செய்துவிட்டால் வீண் தொந்தரவுதான். அதனால் ஏற்படும் பலா பலன்களை லேசில் சமாளிக்க முடியாது!” என்றார்.

“அப்படி ஏதும் நடக்காது! நீங்கள் அதற்காக கவலைப்பட்டுக் கொள்ளவும் வேண்டாம்!” என்றான் ஆக்டேவ்.

“வீட்டைப் பார்த்தீர்கள் அல்லவா? இங்கு எத்தனையோபேர்கள் குடியிருக்கிறார்கள். எல்லாம் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள். மிகவும் மானஸ்தர்கள் அவர்களால் எவ்விதமான தொந்தரவும் இருக்காது. பாருங்கள்! ஏதாவது சப்தம் கேட்கிறதா? அதனால் தயவு செய்து நீங்களும் வீட்டுக்கு மரியாதை கொடுங்கள்!” என்றார் காம்பர்டன்.

ஆக்டேவ் தானும் அம்மாதிரியே இருப்பதாக வாக்களித்தான்.

சற்றும் நம்பிக்கையே இல்லாத பார்வை ஒன்றை காம்பர்டன் சுற்றும் வீசினார். பிறகு மெதுவான குரலில் ஆக்டேவிடம் சொன்னார்,

‘வெளியில் எதுநடந்தாலும், யாரும் கேட்பாரில்லை. பாரிஸ் பெரிய நகரம். உங்களுக்குத் தெரியுமே, இங்கு எவ்வளவோ ‘அந்த’ இடங்கள். நான் கலைஞன், குடும்பஸ்தன். எனக்கு இதற்கெல்லாம் நேரமில்லை......உம்...சரி... வாருங்கள் போவோம் என் மனைவி காத்திருப்பாள், என்றார் கலைஞர் காம்பர்டன்.

மூன்றாவது மாடிக்கு அவர்கள் வந்தபோது, வேலைக்காரி ஒருவள் எதிர்ப்பட்டாள்: அவள் கொஞ்சம் கறுப்புதான். இருந்தாலும் உடல் கட்டோடு இருந்தது. இவர்களைப் பார்த்தவுடன்,

“எஜமானி ...... இப்போது வருகிறதாகச் சொன்னார்கள்” என்றாள். அவள் காம்பர்டன் மனைவியைப் பற்றித்தான் சொன்னாள்.

ஆக்டேவ் அதுவரை சும்மா இருப்பது எப்படி, என்று காம்பர்டன்னே யோசித்து, அங்கிருந்த, தன் இருப்பிடத்தை, சுற்றிக் காண்பித்தார் அவனுக்கு! முதலில் அவர் பார்த்த அறை மிகவும் பெரியதாகவும், பொன் முலாம் பூசப்பட்ட நிறத்தோடும், காட்சி அளித்தது. அதுதான் அவருடைய வரவேற்பு அறை. அறைக்கு செயற்கை அழகு அதிகமாக செய்யப்பட்டிருந்தது. அதற்கடுத்தபடியாக இருந்த அறை அவர்கள் உபயோகத்தில் வைத்திருந்த மற்றொரு அறை.

ஆக்டேவ் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, மேலே தலையைத் தூக்கிப்பார்த்தான்.

கட்டிடத்தில் இரண்டு உத்திரங்களுக்கு நடுவில் - விரிசல் கண்டு, உள்ளிருந்த செங்கல்—சுண்ணம்பு வெளியே தலை நீட்டிக்கொண்டிருந்தன.

காம்பர்டன் அதற்கான சமாதானம் சொல்ல ஆரம்பித்தார்.

“இந்த விரிசல் இருப்பதுவும்ஒருவிதத்தில் நல்லதுதான் கட்டிடத்தின் உண்மையான நிலை இதில் தெரிகிறது பாருங்கள். கட்டி பன்னிரண்டு வருடங்கள்தானாகிறது! அதற்குள் இதன் முடிவு தெரிகிறது என்றால்...வேலை எவ்வளவு மோசமானது என்று நாம் தெரிந்துகொள்ள வேண்டியதுதான். முன்பக்கம்அலங்காரமாக எவ்வளவோ வேலைகள் செய்தார்கள்; மூன்று முறை சுவற்றிற்குவர்ணமடித்தார்கள்;அறையை அழகுபடுத்தினார்கள்;ஆனால் இவ்வளவையும் செய்து விட்டு கடைசியாக அவசரப்பட்டு விட்டதனால்தான் இந்நிலை. இருந்தாலும் பரவாயில்லை; கட்டிடம் இன்னும்பல வருடங்களுக்குத் தாங்கும் என்றார் காம்பர்டன்.

அதற்கடுத்த அறைக்குள் இருவரும் புகுந்தனர். ஜன்னல் கண்ணாடி அவ்வறைக்கு கீழே பதிக்கப்பட்டிருந்தது. அங்கிருந்து வரும்வெளிச்சந்தான். அதற்கு இடது புறத்திலிருந்த அறை காம்பர்டனின் மகள் அஞ்சலாவுடையது அவள் அங்

கேதான் தூங்குவாள்; அறை தூயவெள்ளைநிறத்தோடுஇருந்தது,வர்ணப்பூச்சுகளேஒன்றும் காணோம்! நவம்பர் மாதத்து பிற்பகல் வெளிச்சத்தில் துக்ககரமாக காட்சி அளிக்கும் கல்லறையைப் போலிருந்தது அவ்வறை வழியின் முடிவில் இருந்தது சமையல் அறை "அதையும் பார்த்துவிடலாம். வாருங்கள் எதையும் பாக்கி வைக்கக் கூடாது" என காம்பர்டன் கூறிக்கொண்டு ஆக்டேவை அழைத்துச் சென்றார் சமையல் அறைக்குள்.

* * *

அவர் வீட்டைப் பார்த்தாயிற்று; காமபர்டன் தனக்கு வெளியில் ஏதோ கொஞ்சம் வேலையிருப்பதாகச் சொல்லி விட்டு போனார் ஆக்டேவை தன் விட்டில் உட்காரவைத்து விட்டு! ஆக்டேவ் சற்று நேரந்தான் தனித்திருந்திருப்பான் திருமதி காம்பர்டன் எங்கிருந்தோ வந்து சேர்ந்தாள் அவனை வரவேற்க. ஆக்டேவினால் அவளை உடனே, அடையாளங்கண்டு கொள்ள முடியவில்லை. அவன் சிறுவனாக இருந்தபோது அவளைப்பார்த்திருக்கிறான். ஆனால் அவள், அப்போது எப்படியிருந்தாள்?

ஒல்லியான உருவம், பார்ப்பதற்கு சற்று அருவறுப்பாக இருக்கும் கவர்ச்சியே இல்லை. அப்படியிருந்தவள் இப்போது நன்றாக பருத்து, அமைதியான முகப்பொலிவோடு காட்சியளித்தா... ஆக்டேவ் என்ன, காண்பவர் யாருமே சற்று திகைத்துத்தான். போவார்கள் மாறுதலைக்கண்டு; அவள்தகப்பனர் மராமத்து இலாகாவில் குமாஸ்தா வேலை பார்த்து வந்தவர், அப்போது இருந்த போஷாக்கு வேறாகத்தான் இருந்திருக்கும், இப்போதிருப்பதை போல் இராமல் வயது முப்பது ஆகிவிட்டிருக்கும் அவளுக்கு கவர்ச்சி அதிகமில்லாவிட்டாலும் உடல் நன்றாக பெருத்திருந்தது சிவந்த முகத்தில் களை இருந்தது. ஆமாம்! ஏன் அவள் இவ்வளவு சிரமத்தோடு நடந்து வருகிறாள்? உடலின் பாரத்தை சுமக்க முடியாதது காரணமாக இருக்கமுடியாது! ஆக்டேவ்அவளை உற்றுப் பார்த்தான்.

அத்தியாயம்-2

"அடேயப்பா! நீ என்ன இப்படி வளர்ந்து விட்டாய்? நாங்கள் போனதடவை ஊருக்கு வந்திருந்த போதுகூட நீ இவ்வளவு உயரமாக இருந்திருக்கவில்லை!" என்றாள் திருமதி சந்தோஷமான குரலில்.

அவன் அவளோடு கை குலுக்கினான்.

அவள் மீண்டுமொருதடவை அவனை ஏறிட்டுப் பார்த்தாள். நன்றாக வளர்ந்திருந்தான், அழகானதோற்றம், யாரையும் எளிதில் கவரும் முகம் அவன் பெற்றுள்ள இயற்கையான சம்பத்து.

"உன் வயதென்ன?" என்றாள் திருமதி காம்பர்டன்.

"இருபத்திரண்டு!"

அவள் நம்பவில்லை, குறைந்தது இருபத்தைந்தாவது இருக்குமென்றுதான் அவள்நினைத்தாள் பெண்கள் எப்படிப் பட்டவர்களாக இருந்தாலும், அவனைப் பார்த்தால் சற்று திணறித்தான் போவார்கள்-- அவன் கண்களில் கவர்ச்சி இருந்தது.

"ஆமாம்! நான் வளர்ந்து தான் விட்டேன்......" என்று கூறியஆக்டேவ் மேலே அவள் குடும்பச் செய்திகளைப் பற்றி கூறலானான்.

திருவாளர் டாமர்க், தன் தொழிலிலிருந்து ஓய்வுபெற்றவுடன், நிரந்தர உபயோகத்திற்கு சொந்தஊரிலேயே வீடு வாங்கிக் கொண்டு மனைவியோடு தங்கி விட்டார். தனிமை ஒன்றுதான் அவர்களால் தடுக்கமுடியாத விஷயமாக இருந்தது;அவர்களுடைய மகள் ரோசி இருந்தவரை அதற்கும் கவலையில்லை. காம்பர்டன் அங்கு ஏதோ வியாபார விஷயமாக வந்தவர் ரோசியை மணந்து கொண்டு, அவளை பாரிசுக்கு கூட்டிவந்து விட்டார். அவள்தான் திருமதி காம்பர்டன்; மகளுக்கு கல்யாணமாகி விட்டது குறித்து டாமர்க் தம்பதிகள் சந்தோஷமடைய வில்லை. அவளைப் பிரிய அவர்களுக்கு மனமே இல்லை, காம்பர்டன் அவளை தன்னுடன் அழைத்துச் செல்வதில் பிடிவாதமாக இருந்ததினால் அவர்களுக்கும் கொஞ்சம் மன வருத்தந்தான் ஏதோ அவர்களும் ஒரு மாதிரியாக தங்களுடைய கடைசி நாட்களை தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆக்டேவ் ரோசியின் தாய்தந்தையர்களைப் பற்றி பேசிவிட்டு அடுத்தபடியாக காஸ்பரினைப்பற்றி பேச்செடுத்தான். காஸ்பரின் ரோசியின ஒன்றுவிட்ட சகோதரி; உடரமாக வளர்ந்து, கம்பீரமாக இருப்பாள். சுமாரான அழகி, ஆனால் ஏழை! காஸ்பரினைக் கண்டால், காம்பர்டனுக்கு ரொம்பவும் பிடிக்கும் அவனுக்கும் அப்படியே! காம்பர்டன் ரோசியை மணந்து கொண்டதும், காஸ்பரின் மனமுடைந்து பாரிசுக்குப் போய் விடடாள். தன் அத்தையிடம் ரோசியை மணந்ததால் காம்பர்டனுக்கு முப்பதாயிரம் பிராங்குகள் வரதட்சணை கிடைத்தது. அதற்குப் பிறகு என்ன நடந்தது என்று ஆக்டேவுக்குத் தெரியாது! ரோசியிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப் பார்த்தான்;ஆனால் ...அவளிடமிருந்து ஒரு விஷயத்தையும் அவனால் கிரஹிக்க முடியவில்லை.



திருமதி காம்பர்டன்னினால் அதிக நேரம் நின்று கொண்டு பேசமுடியவில்லை. பக்கத்திலிருந்த சோபாவில் அமர்ந்து, எதிரிலிருந்த சின்ன நாற்காலிகளின்மீது கால்களை வைத்துக் கொண்டாள், சற்றுதாழ்வான சோபாவில் ஆக்டேவ் அமர்ந்து அவளுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தான் என்னதான் வளர்ந்திருந்தாலும் அவனிடம் பெண்மையின் கவர்ச்சி இருந்தது, ரோசிக்குத் தெரிந்தது. அவன் பேச்சில் இருந்த குழைவு எளிதில் யாரையும் வசீகரிக்கும் தன்மை படைத்திருந்தது. ரோசி மட்டும் அதற்கு விலக்கா என்ன?

சிறிதுநேர பழக்கத்திற்குள் ஏதோ நீண்டநாள் பழகிய இரண்டு பெண் சிநேகிதர்களை போல் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஆக்டேவ் முடிவில் தன் விஷயத்தைப்பற்றி பாரிசுக்கு வ்ந்த வேலையைப்பற்றி-சொன்னான்.

கல்லூரியில் பட்டம் கிடைத்தது அதை வைத்துக்கொண்டு பிழைத்துவிட முடியுமா என்ன? அவன் குடும்பத்தின் சந்தோசத்திற்காக மூன்று வருடங்களை, மார்சேல்ஸ் நகரில் காலிகோ மில்லில் வேலை பார்த்துக் கழித்தான். அவனுக்கு வியாபாரத்தில்தான் நாட்டம் அதிகம் இருந்தது. பெண்கள் அணியும் உடை, நாகரீகச் சாமான்கள் முதலியவற்றை வாங்கி விற்பதில் லாபம் அதிகம் இருப்பது அவனுக்குத் தெரியும்! பெண்களை கெடுப்பது எவ்வளவுஎளிதோ அவ்வளவு எளிது வியாபாரமும், என்பது அவனது தேர்ந்த முடிவு. சிரித்துக் கொண்டே தன் வியாபார அனுபவத்தைப் பற்றி அவன் சொன்னான். சில நாட்களில் ஐயாரிரம் பிராங்குகள் சம்பாதித்து விட்டதாகவும், அப்பணமும் இல்லாதிருந்தால் தான் பாரிசுக்கு வந்திருக்க முடியாதென்றும் சொல்லி விட்டு கடைசியாக,

"இர்ண்டு வருடங்கள் பிரயாணம் செய்து அலுத்து விட்டேன் பாரிசில் என் அதிர்ஷ்டத்தைப் பார்த்து விடுவது என்று வந்திருக்கிறேன். இனி மேல் ஏதாவது வழி செய்ய வேண்டும்!" என்றான் ஆக்டேவ். "என்ன? உனக்கு ஒன்றுமே தெரியாது போலிருக்கிறது' அச்சில்லே, உன்னிடம் சொல்லவில்லை. அவர் உனக்கு ஒருவேலை தயாராக வைத்திருக்கிறார். அந்த இடம் கூட இங்கிருந்து வெகு அருகில்தான் இருக்கிறது!' என்றாள் ரோசி!

ஆக்டேவ் இதைக் கேட்டு மிகவும் சந்தோஷமடைந்தான் தலைகால் புரிய வில்லை அவனுக்கு. ஏதேதோ பேசினான். வருடம் ஆயிரம் பிராங்குகளாவது கிடைக்கும். தங்க அறையும் இருக்கிறது. ஒரு பெண்ணும்கூட இருந்து விட்டால் தேவலை என்று! கொஞ்சங்கூட கூசாமல் அவன் சொன்னதைக் கேட்டு ரோசிதான் வெட்க மடைந்தாள்.

அந்தநேரத்தில் ஒரு பெண் உள்ளே நுழைந்தாள். அவளுக்கு வயதுபதினாறு இருக்கும். நன்றாக வளர்ந்திருந்தாள். ஆனால் பார்வைக்கு எடுப்பாக இல்லை அவள் தோற்றம்!

க்தவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தவள் ஆக்டேவ் இருப்பதைக்கண்டு ஆச்சர்யப் பட்டுப் போனாள்.

"உள்ளே வாம்மா! பயப்படதே! இவர்தான் மிஸ்டர் ஆக்டேவ் மௌராட். நாங்கள் இவரைப் பற்றி பேசிக் கொண்டிருப்பதை கேட்டிருப்பாயே?" என்று அவளிடம் கூறிவிட்டு ஆக்டேவின் பக்கம் திரும்பி,

"இவள் என் மகள். அஞ்சலா. நான்கடைசியாக ஊருக்கு வரும்போது இவளை உடன் அழைத்து வரவில்லை. காரணம் இவள்'உடல் நிலைதான். மிகவும் நோஞ்சலான உடலமைப்பு படைத்தவள்" என்றாள் ரோசி.

(தொடரும்)

இத் தொடர் கதையை
தமிழில் தருபவர்
ரா, வேங்கடசாமி

சூழ்ந்து வரும் தொல்லைகள்; நமக்கு அவை தூசுகள்!

டால்ஸ்டாயை எங்கே கம்யூனிஸ்டுகள் பிற்போக்குவாதி என கூறி இருக்கிறார்கள் என ஆத்திரமாக கேட்பவர்களுக்கும், வியப்போடு வினா எழுப்புகிறவர்களுக்கும், "சோவியத் நாடு" என்ற மாஸ்கோ பத்திரிகையை காணிக்கையாக்குகிறோம். ஜூலை 10ம்-தேதியிட்டு வெளியான அந்த பத்திரிகையில், ஆண்டன்செக்கோவின் வரலாறு பற்றி எழுதி ஸ்டாலின் பரிசு பெற்ற பேராசிரியர் எர்மிலோவ் என்பவர் (பக்கம் 31-ல்) "6-வது எண் அறை என்ற இக்கதையின் மூலம் செக்கோவ் சக்தி வாய்ந்த முறையில் தாக்கித் தகர்த்தார். இக்கதை குறிப்பாக, "தீமையை பலாத்காரத்தின் மூலம் எதிர்ப்பது கூடாது", என்ற **டால்ஸ்டாயினது பிற்போக்குப்** போதனையைத் தவிடு பொடியாக்கியது," என்று எழுதியிருக்கிறார். ஆம்! எல்லாமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளி வருகிற பத்திரிகையில் தான் இந்த குறிப்பு காணப்படுகிறது.

ஒருவரை புகழ்ந்து எழுதும் போது இன்னொருவரை தாழ்த்தித்தான் எழுதவேண்டும் போலும்! விசித்திரம்! நிற்க,

டால்ஸ்டாயையே பிற்போக்குவாதி என கூறுகின்றவர்களை தலைமேலேற்றித்திரிபவர்கள், மாஸ்கோவில் எது கூறப்பட்டாலும், அது "வேத வாக்காக"க் கொள்பவர்கள், கேப்பிடலும் மார்க்ஸீயமன்றி வேறொன்றறியாபராப்ரங்கள், தலை வலிக்கும் வயிற்று வலிக்கும் மாஸ்கோவில்தான் மருந்துண்டு என நம்பி அங்கு சென்று மருத்துவம் பெற்று திரும்பினவர்கள், மருத்துவம் செய்து கொள்ளத் துடிதுடித்து நோய்களை வரவைக்க முயலுகிறவர்கள் பின் எப்படி இருப்பார்கள். எந்த முறையில் கூறுவார்கள் என்பதை ஒரு கணம் சிந்தித்தால் போதும். பிற்போக்குவாதிகள் என நம்மைப்பற்றி எழுதுபவர்களைப்பற்றி ஆத்திரப்படத் தோன்றுது; பரிதாபப்படத் தோன்றும்! பிற்போக்குத் தனத்திற்கு இலக்கணம் தெரியாதவர்கள் அவர்கள், எனவே கண்டவர்களை கண்டபடி பிற்போக்கு எனக் கூறத் துணிகின்றனர். அனுதாபப்படுவதைத்தவிற ஆத்திரப்படுவதில் அர்த்தமே இல்லை. ஏசு சிலுவையிலே அறையுண்டபோது கூறினுராமே," அவர்கள் என்ன செய்கிறார்கள் என அவர்களுக்கே தெரியாது, எனவே பிதாவே! அவர்களை மன்னியுங்கள்;" என்று! அதைப்போலவே நாமும் கூறுகிறோம்; அறியாமையால் ஏதோ எழுதுகிறார்கள், அதை பொருட்படுத்த வேண்டாம் என்று, தங்கள் நாட்டின் மிகப் பெரிய மனிதர்களையே பிற்போக்குவாதிகள் என எழுதத் துணிந்தவர்கள், பிற நாட்டிலுள்ளவர்களை எப்படித்தான் கூறமாட்டார்கள் என எண்ணிப்பாருங்கள். கோபமே தோன்றுது. இரக்கஉணர்ச்சி ஏற்படும்.

தங்களின் வலிமை குறைகிற நேரத்தில் மாற்றுக்கட்சியரை வசைமாரி பொழிவதும், பொய்புரளிகளை கிளப்பி விடுவதும் பண்படாதவர்கள் செயல். இந்த விதிக்கு கம்யூனிஸ்டுகட்சியினரும் விலக்கல்ல. எனவேதான் கண்ட கண்ட இடங்களில் அண்ணு காமராசர் சந்திப்பைப்பற்றி புரளி கிளப்பி விட்ட வண்ணமே உள்ளனர். ஒரு கட்சித்தலைவன் பிறிதொரு கட்சித்தலைவனை சந்திப்பது அநாகரீகமான செயல் அல்ல. அரசியல் தெரிந்தவர்கள் கூற மாட்டார்கள் அப்படி சூ-என்-லாயைசந்தித்தார்நேரு அண்மையில். சூ விருந்துண்டார் நேருவிடன், அரசியல் கண்ணியமது. அதைப்பற்றி எவரும் தவறுன பிரசாரம் செய்யவில்லை. செய்வதும் அநாகரீகம். ஆனுல் அறிஞர் அண்ணுவை காமராசர் சந்தித்தார் என்ற உடனே எவ்வளவு கதைகள் கட்டிவிடப்படுகின்றன.

தோழர் கல்யாண சுந்தரம், **M.L.A.** கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர். பொறுப்புள்ளவர் அவர்கூட இப்பொழுது அந்த சந்திப்பைப்பற்றி தவறுன பிரச்சாரம் செய்வதில் ஈடுபடுகிறார் என்பதை கூர்ந்து நோக்கும்போது, கம்யூனிஸ்ட் கட்சி திராவிடத்தில் எவ்வளவு வேகமாக சரிந்து வருகிறது என்பதை அரசியல் யூகமுள்ளவர்கள் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது. "அடக்கு முறையை ஏவுவேன்" என கூறினுராம் காமராசர் அண்ணுவிடம். எனவே அண்ணுதுரை பணிந்து விட்டாராம். நேருவின் சொல் கேளாமல் தி. மு. மூகத்தை அடக்க வேண்டிய அவசியமில்லை. அது கம்யூனிஸ்டுக்கு விரோதமான கட்சி என்று எழுதினுராம் காமராசர், என்பன போன்ற கற்பனைப்புளுகுகளை கல்யாண சுந்தரங்களா செய்வது? என்ன பரிதாபம்! என்ன பரிதாபம்!

அடக்குமுறையைக் கண்டு அஞ்சி ஓடுபவர்கள் அல்ல தி. மு. கழகத்தினர் என்பதை நாட்டின் வரலாறு விரிவாக விளம்புகிறது. மும்முனைப் போராட்டம் அதனுல் விளைந்த விளைவுகள் அந்த கூற்றைத் தான் குன்றேறி குவலயத்திற்கு அறிவிக்கின்றன, என்று குருடர்களைத் தவிற ஏனையோர் ஒத்துக்கொள்ளுகின்றனர். ஆனுல் இந்த பரிதாபத்திற்குரிய பொது உடமைத் தோழர்களுக்கு கருத்து குருடாகிவிட்ட காரணத்தால், உண்மை ஒளி தெரியவில்லை. கூட்டங்களிலே புலம்புகிறார்கள். போகட்டும்! அவர்களுடைய ஆசையை நாம் கெடுப்பானேன்?

ஆனுல் இந்த பொய் பிரச்சாரங்களால் எந்தவிதநன்மையும் ஏற்பட்டுவிடாது. "பிற்போக்குத்தன்மை" என்று இவர்கள் கூறுவதாலேயே தி.மு. கழகத்தினர்பிற்போக்குவாதிகள் என்று பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளார். அரசியல் கண்ணியத்தை இழப்பவர்கள் அரசியலில் நீடித்து நிற்க இயலாது. எனவே இன்று நம் அனுதாபத்திற்குரிய கம்யூனிஸ்ட் தோழர்கள் தாங்கள் போகும் பாதையை மாற்றிக் கொள்வார்களா என பொருத்திருந்து பார்ப்போம்.

தூற்றல் நம்மை துளைத்து விடாது! வசைமாரி நம்மை வாடச் செய்ததில்லை. **இனி** செய்யவும் போவதில்லை! 'பிற்போக்குத்தனம்" என குற்றம் சாட்டி விடுவதாலேயே நாம் நமது புனித் கொள்கைகளை விட்டு விடமாட்டோம்! **அவர்கள் தொல்லைகள் நமக்கு தூசுகள்! எதையும் தாங்கும் இதயம் உடைய வைர நெஞ்சர்கள் நாம்! அறிஞர் அண்ணுவின் பக்கத்திலே பெருமிதத்துடன் நிற்கும் நாம் பிறரைக் கண்டு அஞ்சப் போவதில்லை. அடங்கவும் செய்யோம்! நம் பாதை வழியே செல்வோம்! நிச்சயம் வெல்வோம்! உறுதி! உறுதி!! உறுதி!!!**

மா. நெடுஞ்சேரலாதன்

இலங்கையில் நமது இயக்கம்!

இலங்கை வாழ் தமிழ் மக்களிடையே அறிவியக்கக் கருத்துக்களை பரப்பி, கிளைகள் பல கண்டு, வேருன்றிவளர்ந்து வரும் இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சரித்திரத்தில் முதன் முதலாக நடைபெறப்போகும் பொதுக்குழுத் தேர்தல் பற்றிய செய்திகேட்டு மகிழ்ச்சியடைகின்றோம்! இலங்கை அறிவியக்கச் செயல் வீரர்களை பாராட்டுகின்றோம்! இலங்கை தி. மு. க. வுக்கு எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள் உரியதாகுக!

ஆசிரியர்

பொறுப்பற்ற போலீஸ் அதிகாரிகள்!

சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா திருநெல்வேலி—திருச்செந்தூர் மார்க்கத்திலுள்ள கருங்குளம் என்ற கிராமத்தின் வழியாகப் போகவேண்டியிருந்ததாம். அவர் அந்த வழியாக போகும்போது திராவிட முன்னேற்றக் கழகக் கொடி அவரது கண்களில் தட்டுப்படக்கூடாது என்று எண்ணி கொடியை இறக்கி தீ வைத்துக் கொளுத்திவிட்டனராம்.

இதைச் செய்தது காங்கிரஸ்காரர்கள்கூட அல்ல; அந்த ஊர் போலீஸாராம்! இந்தப் புல்லர்களுக்கு பொறுப்புள்ள போலீஸ் இலாக்காவில் • என்ன வேலை? என்று கேட்கிறோம். பொதுமக்களுக்கும் பொதுச்சொத்துக்களுக்கும் பாதுகாப்பளிக்க வேண்டியவர்கள் கடமையையும் பொறுப்பையும் மறந்ததேன்?

ஒரு கட்சிக்கொடியை—அதிலும் நாட்டுமக்களின் நன் மதிப்பைப் பெற்றுள்ள ஒரு மகத்தான இயக்கக் கொடியை—இறக்கித் 'தீ' வைப்பதென்றுல் இது நாகரீகமுள்ள நாட்டில் நடக்கக் கூடிய காரியமா? என்று கேட்கிறோம்.

இந்தச் செய்திகேட்டு உண்மையில் திடுக்கிட்டோம். பத்திரிகைச் செய்தி உண்மையானுல் சென்னை சர்க்கார் சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகள்மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பாதை வழிச் செல்வோம்; வெற்றிகளைப் [illegible]

'குத்தும் வெட்டும்' மலேயாவில்!

சாட்டையால் அடிப்பது, நகக்கண்களில் ஊசியை நுழைப்பது, கண்களில்பழுக்கக் காய்ச்சிய கூர்மையான இரும்பைகொண்டு குருடாக்குவது, எரியும் நெருப்பிலே ஒருவனை அப்படியே கை கால்களைக் கட்டிப்போட்டு விடுவது சிறு அறை ஒன்றில் வைத்துப் பூட்டி உள்ளே காற்றுப் புகாமல் செய்துவிடுவது; இவையெல்லாம் மனிதனை சித்திரவதை செய்வது என்று கூறுவார்கள். இக்காரியங்களைச் செய்வோரைக் கொடியவர்கள், இதயம் இல்லாதவர்கள். என்று அழைப்பார்கள் மக்கள். இதே முறைகளை அரசியல் துறையில் கையாள்வோரை பயங்கரவாதிகள் என்பார்கள்.

சில நாட்களுக்கு முன்பு பத்திரிகைகளிலே செய்தி ஒன்று வெளியாயிற்று. மலேயாவில கம்யூனிஸ்டுகள் மக்கள் விடுதலைக்காக பயங்கரச் செயல்களில் ஈடுபடுகிருர்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அவர்களில் சிலர் துரைசாமி, கோவிந்தன் நாயர் என்ற இரண்டு திராவிடர்களை மரம் ஒன்றிலே கட்டிவைத்து கை வேறு கால் வேறாக துண்டித்தார்கள்; துடித்துக் கொண்டிருந்த அவர்கள் கூறப்படுகிறது. அவற்றிலே பல உண்மையாக இருக்கலாம். சில திரித்துக் கூறப்படலாம். மேலே நாம் கொடுத்திருக்கும் செய்தி மலேயக் கம்யூனிஸ்டுகளின் முறைகளில் ஒன்று.

பாட்டாளிகள் அரசை அமைக்கவும், முதலாளியின் ஆதிக்கத்தை ஒழிக்கவும் கம்யூனிஸ்டுகள் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு முறையைக் கடைப்பிடிப்பார்கள்

தலைமறைவாகப் போவது, தஞ்சம் புகுந்து பின்னர் நல்லவர்கள் போல் நடித்து தொழிலாளிக்கு நன்மை செய்யாத முதலாளியின் சொத்துக்களை நாசமாக்குவது. புரட்சி செய்வது, இவை எல்லாம் காரல்மார்க்சினுல் சொல்லப்பட்ட முறைகள் என்று கூறிக்கொண்டு உலக கம்யூனிஸ்டுகள் கையாளும் முறைகள்.

நமது நாட்டிலே அவர்கள் எப்படி இருந்தார்கள்.எந்தெந்த முறைகளைக் கையாண்டார்கள். இப்போது எப்படியிருக்கிருர்கள் என்பதை எல்லாம், மக்கள் நன்கு அறிந்திருக்கிருர்கள். அகில இந்தியா, மக்கள் விடுதலை, தொழிலாளியின் உயர்வு, பாட்டாளியின் துயரம், மக்கள்

''இந்தியாவில் கம்யூனிஸ்ட்கொள்கை ரஷ்யகொள்கைக்கு மிகவும்வித்தியாசமானது.இந்தியாவில்முதலாளித்துவம் ஒழிய வேண்டுமென்று சொல்லவில்லை. இங்கு கம்யூனிஸ்டு கட்சி ஏழ்மையைப் போக்கவும், நிலச்சீர் திருத்தத்தை ஏற்படுத்தவும் தொழில் அபிவிருத்திக்கும் போராடி வருகிறது. இப்போது இந்தியாவில் பூரண தேசியமயமாக்க வேண்டும் என்ற கொள்கை கம்யூனிஸ்டு கட்சிக்கு இல்லை. வெளிநாட்டு மூலதனத்தை ஒழிக்க வேண்டும் என்பதுதான்''

மலேயாவில் கம்யூனிஸ்ட்டுகளின் போக்கு எப்படி இருக்கிறது என்பதற்கு ஆதாரம் ஒன்றை மேலே தந்திருக்கிருேம். இந்தியாவில் அவர்கள் கொள்கை என்ன என்பதை தோழர் கலியாணசுந்தரம் விளக்கமாகக் கூறியிருக்கிருர். இக்கருத்து சுதேசமித்திரன் 19-9-54 சென்னை இதழில் வெளியாகி இருக்கிறது,

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி முதலாளித்துவம் ஒழியவேண்டும் என்று போராடவில்லையாம்; புதுமையாக இருக்கிறதல்லவா, சட்டசபை உறுப்பினரின் கருத்து. காரல்மார்க்ஸ் தத்துவமே முதலாளி தொழிலாளி என்ற இரண்டு வர்க்கங்களின் இடையே நடைபெறும் நீண்ட போராட்டத்தைத்தான் குறிக்கிறது. ஆனுல் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி முதலாளித்துவம் ஒழிய வேண்டும் என்று சொல்லவில்லையாம். ஆனுல் வெளி நாட்டு மூலதனம் ஒழிய வேண்டுமாம். ஆர்வியின் ஆதிக்கம்கூடாது. ஆனுல் பிர்லாவின் ஆதிக்கம் ஒழியவேண்டியதில்லை. இதுதான் அவர் கருத்து. கம்யூனிசக் கொள்கைக்கு அவர் தரும்புதிய விளக்கம் இது எனலாம். முதலாளித்துவம் ஒழியவேண்டு மென்பதில்லை என்றுமட்டும் அவர் பேசவில்லை. இந்தியாவில் பூரண தேசியமாக வேண்டுமென்ற கொள்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கு இல்லை என்றும் தோழர் கலியானசுந்தரம், திருச்சி ரோட்டரி கிளப்பிலே பேசினுராம்.

முதலாளித்துவம் ஒழிய வேண்டியதில்லை!

இந்தியாவில் பூரணதேசியமயமாக வேண்டுமென்ற கொள்கைகம்யூனிஸ்ட் கட்சிக்கு இல்லை.

இரண்டு நல்ல கருத்துக்கள். காங்கிரஸ் காரர்கள்கூட சில நேரங்களில் பகிரங்கமாக சொல்ல அஞ்சும் கருத்துக்கள்.

மாஸ்கோ பக்தர்கள் என்று அழைக்கப்படுவதற்கு மறுப்புக் கூறும் வகையில் ரஷ்யக் கம்யூனிசத்திற்கும், இந்தியக் கம்யூனிசத்திற்கும் உள்ள வேறுபாடுகளை தோழர் கல்யான சுந்தரம் எடுத்து காட்டினுர்போல் தெரிகிறது. வேறுபாடுகளுக்கு அவர் தந்திருக்கிற விளக்கம் விபரீதமாகக் காட்சி அளிக்கிறது. முதலாளித்வம் ஒழிய வேண்டியதில்லை என்ற கொள்கையை உடைய கட்சி.கம்யூனிசதத்வத்தைப் பின் பற்றுவதாக இருக்கமுடியாது, இப்போது நிலவும் சூழ்நிலையில் இந்தக் கருத்து வாஷிங்டன் அன்பர்களிடம் காணப்பட வேண்டியது. மாஸ்கோ பக்தர்களிடமிருந்து வருகிறது. 'நான் கண்டரஷ்யா என்ற' தலைப்பிலே பேசியபோது சொன்னகருத்து பாட்டாளிக்குச் சாதகமாக இல்லை. பண முதலாளிகளுக்கு ஆதரவாக இருக்கிறது. ஒருகால் இந்திய கம்யூனிஸ்டுகள் கொள்கையை மாற்றிக் கொண்டார்களா? அல்லது இப்படிப்பேசி பலரின் தயவை எதிர்ப்பார்க்கிருர்களா? அல்லது எதைச் சொன்னுலும் நாட்டுமக்கள் கேட்டுக் கொள்வார்கள் என்ற நினைப்பா? உலகிலே காணப்படும் கம்யூனிச இயக்கங்களுக்கெல்லாம் காமின் பாரம் வழி காட்டுகிறது என்று சொல்லப்படுகிறது. மலேயாவில் கம்யூனிசத்தை பரப்ப மனிதனைக் கைவேறு கால்வேறாக துண்டிக்கிருர்கள்,இந்தியாவில் முதலாளித்துவம் ஒழிய வேண்டுமென்பதில்லை என்கிருர்கள்.

'வாழ்க! உள்நாட்டு முதலாளித்வம்' இந்தியாவில்!

உடலில் இருந்து குடலைப் பிடுங்கி, எட்டி நின்று, இக்கோரக்காட்சியைப்பார்த்து பதைத்துநின்ற இந்தியர்களிடம் காட்டினுர்களாம்: இந்த மகத்தானபணியை மக்கள் விடுதலைக்காகச் !செய்தபின்னர், கம்யூனிஸ்டுகள் எனப்படும் அந்த பயங்கரவாதிகள், கம்யூனிசத்தின் மகிமை பற்றிப் பாடினுர்களாம். தனியாக அல்ல, சுமார் ஐம்பது பேர்கள் சேர்ந்து கொண்டு, தங்களுடன் வேலை செய்தஇருவர் சின்னுபின்னமாக்கபடுவதைக் கண்டு ஆயுதங்களுடன் அக்கொடுஞ் செயலைப் புரிந்த அவர்களைத் தடுத்து நிறுத்தி, துரைசாமி, கோவிந்தன் இருவருடைய உயிரையும் காப்பாற்ற முடியாது நின்ற இந்தியத்தொழிலாளர்களை நோக்கி மலேய கம்யூனிஸ்டு கட்சி மலேயா மக்களுக்கு செய்யும் சேவைபற்றியும் கம்யூனிஸ்டுகளின்பெருமைபற்றியும்-அந்தக் கொலை பாதகர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினுர்களாம்.

கற்பனை அல்ல. மலேய கம்யூனிஸ்டுகள் எனப்படுவோர் புரிந்த கொடுமை இது. நாட்டிலே எல்லாப் பத்திரிகைகளும் இந்த நிகழ்ச்சியை வெளியிட்டன.

கம்யூனிசம் என்ற தத்துவத்தை நோக்கி மக்களை அழைத்துச் செல்ல உலகில் பல நாடுகளில் பயங்கரச் செயல்கள் புரிந்து வருகின்றனர் என்று கவி, உழைக்கும் இனம், முதலாளியின் சுரண்டல். இவை எல்லாம் அவர்கள் அகராதியிலே காணப்படும் சொற்கள். தமிழ் நாட்டிலே உள்ளவர்கள் கம்பனையும் சேர்த்துக்கொண்டிருக்கிருர்கள்.

இந்தியக் கம்யூனிஸ்டுகளின் திட்டம் எது என்பதை அவர்களில் சிலர் அடிக்கடி கூறிவருகிருர்கள். நாட்டிலே அவர்களை மாஸ்கோ நோக்கிகள், அன்னிய நாட்டின் மீது விசுவாசம் வைத்திருப்பவர்கள் என்றெல்லாம் கூறுகிருர்கள் அல்லவா, இதற்கும் அவர்கள் அடிக்கடி பதில் சொல்லி வருகிருர்கள் தமிழ் நாட்டு கம்யூனிஸ்டுகளின் தலைவரான தோழர் கலியானசுந்தரம்., மேற் கண்ட பதில் ஒன்றைத்தந்திருக்கிருர். கனம் காமராஜர் அறிஞர் அண்ணு அவர்களை துப்பாக்கியைக் காட்டி மிரட்டிப்பணிய வைத்துவிட்டதாகப் பேசினுரே அதே தோழர் கலியானசுந்தரம் அவர்கள்தான். ரஷ்யாவுக்குப் போய்விட்டு வந்தவர். சென்னை சட்டசபையின் உறுப்பினர்.

திருச்சி ரோட்டரி கிளப்பில் தோழர் ஆசார்யா என்பவரின் தலைமையில் பேசும்போது தோழர் கலியானசுந்தரம் ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைக்கும், இந்தியக்கம்யூனிஸ்டு கட்சியின் கொள்கைக்கும் உள்ள வேறுபாடு பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிருர்.

அத்துடன் ஏழ்மையைப் போக்கவும் கய்யூனிஸ்டு கட்சி பாடுபடுகிறது என்று பேசப்படுகிறது.தோழர் கலியாண சுந்தரம் அவர்களது ரோட்டரி கிளப் பேச்சில் இந்தக் கருத்தும் காணப்படுகிறது. பத்திரிக்கையில் வந்துள்ள செய்தி உண்மைதானு? உண்மை என்ருல் முதலாளித்துவம் ஒழிய வேண்டாம் என்றுகூறும் நிலைக்கு இந்தியக் கம்யூனிசம் கீழ் நோக்கிச செல்கிறது என்று பரிதாபப் படவேண்டியதுதானு? அல்லது முதலாளித்துவம் ஒழிய வேண்டியதில்லை என்று கூறுவதவால்தான் 'ஆச்சாரியார் இவர்கள் நல்லபிள்ளைகளாகி விட்டார்கள் என்று கூறினுர் என்று நினைப்பதா? ''நல்ல பிள்ளைகளின்'' பொல்லாத போக்கு இது என்பதை நாட்டு மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

'சிவம்'

[redacted] பொல்லாத போக்கு!

கட்டபொம்மன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவன் : அரசே! வணக்கம்.

கட்டபொம்மன் : வருக!

[தூதுவன் மடலொன்றை வேந்தனிடம் கொடுக்கின்றான்—கட்ட பொம்மன் கடிதம் பெற்று படிக்கின்றான்]

மனம் : பாஞ்சாலங்குறிச்சியின் பாக்கிவரித்தொகை—கிளார்க் துரையைக் கொன்றமைக்கு நஷ்டஈடு—இரண்டையும் உடனடியாக அனுப்பிவைக்கவும்... லூஷிங்டன்.

கட்டபொம்மன் : லூஷிங்டனும்! லூஷிங்டன். யார் இவன்?

தானுதிபதி : ஜாக்ஸனின் மறுபதிப்பு...

கட்டபொம்மன் : நஷ்டஈடும் வரிப்பணமும் இந்த நாயக்கர் பரம்பரையிடமா? திருவிடத்தானிடமா? திரை கேட்டு நிற்கின்றனர்.

இல்லை... இல்லை... ஒரு போதும் இல்லை... தீந்தமிழ்நாட்டான் பிறருக்குத் திறைகட்டி முறைகேட்டு நிற்கமாட்டான்.

[ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதத் தொடங்குகின்றான்...]

லூஷிங்டனுக்கு...

காட்சி 20

[லூஷிங்டன் தனது அறையில் கட்டபொம்மன் கடிதத்தைப் படிக்கின்றான்]

லூஷிங்டன் : (மனம்) பாஞ்சாலங்குறிச்சி நாடெங்கும் பஞ்சம், பசியாலும் பட்டினியாலும் மக்கள் பரிதவிக்கின்றனர் பலர் மாண்டும் போயினர். மழையில்லை... மக்கட்கு உணவில்லை... உணவின்றி உயிருடன் போராடிக்கொண்டிருக்கும் மக்களிடம் உல்லாசபுரியினர் வாழ வரி வசூலிப்பது எப்படி முடியும்? விளக்கமாக எழுத வேண்டுவதில்லை... வரிப்பணம் வந்து சேராது...

லூஷிங்டன் : வரிப்பணம் வந்து சேராது... ஏன்?

[தூதனொருவன் அவசரமாக ஓடி வந்து]

தூதுவன் : துரைகளே! இராமநாதபுரத்தில் கொலையாம்! கொள்ளையாம்! சேதுபதி செய்யும் அட்டகாசங்களுக்கு அளவில்லையாம்!

லூஷிங்டன் : கொள்ளையடிக்கின்றார்களா? நமக்கு நல்லது புரிவதற்காகத்தான்! கொலை புரிகின்றார்களா? நமது வலையில் அகப்படத்தான்... சேதுபதியைத் தொலைக்க ஒரு சிறு சந்தர்ப்பம். (உரத்து) எத்திசையும் ஆளும் எங்களைத்தொலைக்க மத்தளம் கொட்டுகின்றானும் மத்தளம். அவன் வாழவா? இருக்கட்டும்... வரிப்பணம் வந்து சேர்ந்ததா?

தூதுவன் : இல்லை... வாங்கும் வன்மை...

லூஷிங்டன் : நமக்கு இல்லை என்று எண்ணுகின்றான். கடல் கடந்து வந்து கப்பம் பெற்று வாழும் நம்மிடம் இந்தக் கட்டெறும்புகள் கப்பம் கட்டாது என்ன செய்யும்?
எங்கே நமது படைஞர்? அடக்குமுறை அடிகோலட்டும்! அழியட்டும் இராமநாதபுரம்...

(மனம் பேசுகின்றது)

இராமநாதபுரத்தார் நாம் செப்பியதைச் செயலாக்கிக் காட்டியவர்கள். கீறிய கோட்டை மீறாதவர்கள்—வெள்ளையர் தம் ஆட்சி வேரூன்ற கல் பொறுக்கிக் கற்கோட்டை அமைத்தவர்கள் ஆட்சி புரியும் நாடு அழிக்கப்படுமென்றால்—துப்பாக்கியும் பீரங்கியும் எங்கள் துணையென்றால்—அஞ்சிநடுங்கி அடிமையாக வாழ்ந்தவர்கள்—இன்று வரி கொடுக்க மாட்டார்களாம் வரி—கப்பம் கட்டமாட்டார்களாம் கப்பம்—காரணம்? இவ்வளவு துணிச்சலுக்கும் எந்த மடையன் காரணம்? ஆம் அறிந்தேன்! நம்மை எட்டி மிதித்துத் தட்டிப் பறிக்க எண்ணும் கட்டபொம்மு நாயக்கன்தான்....(சிந்தனை) ஆம் அவனேதான்! எங்கே ஏடும் எழுத்தாணியும்.

[கட்டபொம்மனுக்குக் கடிதம் எழுதத் தொடங்கல்]

வீரபாண்டியக் கட்ட பொம்முவுக்கு...

(தொடரும்)

இலக்கியத்தில் காதல்

அவளைப் பார்க்கிறான் அந்தக் காதலன். பார்த்ததும் எல்லோருக்கும் நியாயமாக என்ன நடக்கும்? உணர்ச்சி மீதுறும்; உடல் சூடேறும்; இதுதானே! ஆனால் அவனுக்கு அப்படியல்ல! மெய் தளர்ந்துவிடுகிறது! அடடா! என்ன ஆச்சோ! என்னஎழவோ!

"ஏந்திழையே! பூந்தடத்தில் இப்போது பூப் பறிக்க வந்தீரோ; அல்லது மாந்தர் உயிர் பறிக்க வந்தீரோ; கானற் குழல் செய்த சொல்லீர்! உனது கொங்கையைக் குடமாக்கிக் கொண்டு, பகவான் கிருஷ்ண பரமாத்மா கூத்தாடுகிறானே! வடமேந்தும் கொங்கை அந்தரத்தில் நிற்கிறதே! நான் கொஞ்சம் சந்தேகத்தை விட்டு விட்டுத்தாங்கவா? உனது மார்பாகிய கயிலாசத்திலே என்னைச் சேர்த்துக் கொள்ளேன்! உந்தியிலே ஓடையில் எழும் சுழிபோல் சுழி தெரிகிறதே, நான் அதில் குளிக்கட்டுமா? நீ என்னை என்ன செய்யச் சொன்னாலும் செய்கிறேன்! பேராசை ஆற்றில் நான் விழுந்துவிட்டேன். உனது தோள் என்னும் கப்பலில் ஏற்றிக் கரை சேர்க்கமாட்டாயா? உனது தனம் என்கிற மலையிலே, எனது நகம் என்கிற எழுத்தாணியால், மன்மத யுத்தம் என்னும் காதல் யுத்தத்தை, மகாபாரத யுத்தம் போல் எழுதிக் காட்டட்டுமா? காதல் என்கிற கடலிலே பாய் விரித்து, உனது.........என்னும் படகிலே பயணந்தொடங்கி, 'சுகபோகம்' என்னும் தீவிற்குப் போக நான் ஆசைப்படுகிறேன்! பாவையே! நீ நாட்டியக்காரி! நான் நட்டுவன்!" என்று அவளிடம் இன்னும் பலப்பல பேசுகிறான். அவற்றில் அதிகம் சுவையுமில்லை; புதுமையுமில்லை.

இதற்குப் பிறகு மடல் ஊறுவதற்கு முடிவு செய்வதெல்லாம் 'சப்' பென்று இருக்கிறது. ஆகவே இதோடு சித்திர மடலை முடித்துக் கொள்கிறேன்.

* * * * *

இதற்குப் பிறகும் பல புதுமையான காதல் இலக்கியத்தைத் தர நான் ஆசைப்படுகிறேன். சகல இலக்கியத்திலும் உள்ள காதற் பகுதியைக் கரைத்துத் தர நினைக்கிறேன். ஆனால் சில நண்பர்கள் இந்தப் பகுதியை வேண்டாம் என்று எண்ணுகிறார்கள். வேண்டாமா? விட்டுவிடலாமா? இருக்கட்டுமா? ஆழமாக இருக்கட்டுமா? சாதாரண உவமை நயம் போதுமா? பதில் எழுதுங்கள். தீர்மானித்து அடுத்த இதழில் எழுதுகிறேன்!

—காரை முத்துப்புலவர்.

இதோ! தலைசிறந்த படங்கள்!

திருச்சி தஞ்சாவூருக்கு நாங்கள் விநியோகிக்கிறோம்!

நேஷனல் புரொடக்ஷன்ஸ்:

அம்மையப்பன்

மதரூஸ் பிக்சர்ஸ்:

செந்தாமரை

கஸ்தூரி பிலிம்ஸ் — **மேனகா**

பத்மினி பிக்சர்ஸ்: — **முதல் தேதி**

மற்றும்

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி, சொர்க்கவாசல்
நால்வர், பணம், ஆசைமகன், மாங்கல்யம்

மற்றும் பல படங்கள்!

ராணி பிக்சர்ஸ்

திருச்சி.

நெஞ்சின் அலைகள்

த. கோவேந்தன்.

மறந்துபோ நெஞ்சே ! அந்த
மங்கையை நினைக்க வேண்டா ;
துறந்துபோ என்றே நின்றன்
தோளினை மறந்து விட்டாள்
இறந்தனள் என்றே நீயும்
எண்ணிடு கவலல் ஏன் நீ
உறக்கத்தில் கண்ட காட்சி
உண்மைதான் ஆமோ சொல்லே !

காதலாம் காதல் நல்ல
காதலைக் கண்டெ டுத்தாய்
மேதினி எல்லாம் அந்த
மதுவினை மாந்தி விட்டுச்
சாதலே இல்லை என்று
சாற்றிடும் எல்லாம் பொய்யே !
காதலின் உயிர்ப்பா சத்தைக்
கடந்திடு கவலைகொள்ளேல்.

''அன்புயிர் ! காதற் கேணி !
அருளுளம் ! இன்பத் தோட்டம்'
என்று நீ நினைத்தாய் அன்றோ
இன்றுனை ஏங்க விட்டாள்
நன்றுகேள் மறப்பாய் நெஞ்சே
நானிலத் தன்பு கொள்ளு !
தன்னிக ரற்று வாழ்வாய்
தாரணி நின்றன் இல்லம் !

உன்னுடை வாழ்வில் இன்ப
ஒளிதரு விளக்கை ஏந்தி
இன்பூட்டும் எழிலை எங்கும்
நிரப்புவாள் எனநி னைத்தாய்
நன்மையைக் கண்டாய் இல்லை
நம்பினுய் விட்டு விட்டாள்
''அன்படா மறத்தல் ஏது ?''
அலமரல் மறப்பாய் நெஞ்சே !

'பிரிவினை எண்ணேன் ஆனல்,
பேதைஎன் நெஞ்ச கத்தை
வருத்தினுள் ஓர்நாள் காதல்
வளர்ந்தது வான வில்லாய்
பொருந்திய இரண்டு ளத்தே
புகலரு வண்ணங் கண்டேன்
திருவுளம் இந்நாள் இன்பத்
தெழிலினை மறந்த தேனே!

விண்முதல் மண்வ ரைக்கும்
விளைந்ததோ வான வில்லாய்
கண்மலர்த் திரும்பிக் காண் நீ
கற்பனைக் காட்சி கண்டாய்
எண்ணங்கள் கூடிற் றுண்மை
இடையிடை அலைவெண் ணத்தால்
பெண்ணவள் விட்டு விட்டாள்
பிரிவினுக் கஞ்சேல் நெஞ்சே !

''உயர்பெரு நிலவு ஆம் ஆம்
ஒண்டொடி அழகு நெற்றி !
கயல்விழிக் கண்கள் ! இல்லை,
கவிபுனை விண்மீன் காட்சி !
மயிலவள் சாயல் ஆ!ஆ!
மயக்கிடும் ஓவியத்தின்
இயலவள் ! இன்பப் பூங்கா !
எதனைநான் மறப்பேன் தோழா !

கோடையின் குளிர்பூஞ் சோலை !
குழந்தையின் கரவில் உள்ளம் !
ஓடையில் ஊறும் இன்பம் !
உடன்பிறந் தனையார் காப்பே !
ஆடிடும் மயிலின் கூத்தே !
அன்னையின் அன்பின் உள்ளம் !
பாடிடும் குயிலன் னுளை
மறப்பெனே நாளும் தோழா !

விழிப்பார்வை ஒன்றே போதும்
விளை நீராம் உயிர்வித் திற்குச்
சுழிபோடும் கன்னம் காதற்
சுடரினில் எண்ணெய் வார்க்கும்
அழகதன் அழகோ எண்ணில்
அளப்பிலா வாழ்வை வேண்டும்
இழக்கவோ செய்வேன் தோழா
எனையவள் துறந்த போதும் !,,

கா தலோ காவ னத்துப்
புள்ளென செல்லும் மீளும்
மேதினி தன்னில் கிட்டா
மேன்மையா என்ன பெண்மை ?
மோதிடும் கடல லையாய்
உளத்தொடு மோத வேண்டாம்
பாதையில் அவள்ஒ ருத்தி,
பலருளார் மறப்பாய் நெஞ்சே !

''சொல்லிடேல் கொல்லும் கூற்றைத்
துறந்திடு, துறந்தி டென்று
சொல்லிடேல் ; வாழ்க்கைப் பாட்டில்
துறந்திடும் பொருளா காதல் ?
சொல் பொருள் இணைந்தி ணைந்த
தொகைக் கலிப் பாடல் அன்றோ
கல்லினில் ஓவியத்தில்
கலைஞனின் கவிதை யன்றோ ?

உள்ளத்தை உருக்கும் யாழின்
உயிரிசை யன்றோ காதல் !
வெள்ளத்து விளைம லர்ந்த
விளைபயிர் அன்றோ காதல் !
உள்ளத்தோ டுள்ளம் ஒன்றி
உயிர்பெறல் அன்றோ காதல் !
தள்ளத்தான் தகுமோ காதல்
தள்ளிடு என்கின்றுயே !''

அகழ்வாரைத் தாங்கும் நல்ல
நிலமென ;அவளின் காதல்
அகமுனைத் துறந்த போதும்
அவளிடம் அன்பு கொண்டால்
சுகமிலை, துறப்பாய் நெஞ்சே !
கெட்டபால் தூய்மை ஏது ?
பகலினில் நிலவங் கேது ?
பாவையை மறப்பாய் நெஞ்சே !



முக்தா (ஊர்ப்பெயர்காணோம்)

தென்றலில் வள்ளுவனுக்கும் ஒரு பக்கம் ஒதுக்கப் படுமா ?

தென்றல்தான் வள்ளுவன், வள்ளுவன்தான் தென்றல். தனிப்பக்கம் எதற்கு ?

* * *

'இலக்கியத்தில் காதல்' பகுதியில் வள்ளுவனின் குறளுக்கு கதைமூலம் விளக்கம் சொன்னால் என் போன்றோர்க்கு மிகவும் பயன் தரும்.

அதுதான் நமது அடுத்த கட்டம் என்று நினைக்கிறோம் : ஆனால் சிலர் "இலக்கியத்தில் காத''லே வேண்டாம் என்கின்றனர், உமது அபிப்பிராயம் என்ன ?

* * *

கே. அண்ணாமலை, வேப்பேரி.

பண்டித நேரு, ராமசாமி படையாச்சி, மாணிக்கவேலர், ராசகோபாலாச்சாரியார் இந்த நால்வரில் நல்லவர் யார் ?

''கூரைமேல் ஏறி, கொள்ளி சுத்தும் பிள்ளையே யோக்கியன்'' என்ற பழமொழி தெரியுமா உமக்கு ?

* * *

பெ. தமிழ்ச்செல்வன்,
புதுக்கோட்டை.

காதல்களிடனம் புரிந்த கண்ணனது செய்கையைக் கண்டிக்கும் தோழர் கண்ணதாசன் அவர்கள், ஏன் அவனது தாசனுக பெயர் வைத்துக் கொள்ளவேண்டும் ?

கண்ணதாசன் என்றால் கிருஷ்ணனுக்கு தாசன் என்று பொருளல்ல. அழகான கண்களைப்பற்றி வர்ணிப்பதிலும் வர்ணிக்கப்பட்டதைப் படிப்பதிலும் அவருக்கு ஆசை அதிகம், அதனால் 'கண்தாசன்' என்று பெயர் வைத்துக் கொள்ள நினைத்தார். அதில் 'அ' மிகுத்து கண்-அ-தாசன் என்று ஆயிற்று ; இதில் நகைச்சுவை காண்க ! முடிந்தால் சிரிக்க !!

* * *

கவர்னரின் சம்பளத்தைக் குறைக்கவோ கூட்டவோ அதிகாரமில்லாத சென்னை அரசாங்கத்தின்மீது 'கவர்னர் சம்பளக்குறைப்புப் போராட்டம்' நடத்துவது சரியா ?

சென்னை சர்க்கார் மீது போராடப்போவதாக உமக்கு யார் சொன்னார்கள் ? ஒன்று கேட்கிறேன் ; 'சமாதான மாநாடு' சென்னையில் நடத்துகிறார்களே, சமாதானம் சென்னை சர்க்காரால் செய்யப்பட வேண்டும் என்றா ? மற்றவர்களுக்கு அதைத் தெரியப்படுத்தத்தானே ? அதுபோல், வடவர் அரசு, அறியப்போர்முழக்கு வது சென்னையில்நடைபெறும், அதுபற்றி நடவடிக்கை எடுப்பதோ கைது செய்வதோ, சென்னை அரசாங்கம் என்னும் முனிசிபாலிடியின் அதிகார வரம்புக்கு உட்பட்டதாகும்.

* * *

வீ. ந. இராமச்சந்திரன்,
தாமரங்கோட்டை.

நீங்கள் ஏன் தென்றலாக இருந்துகொண்டு புயலாக வீசுகிறீர்கள் ?

இளமையின் அனுபவக் கோட்டை முதுமை. தென்றலின் முதுமை புயல். தென்றல் முதிர்ந்து விட்டது என்று பொருள் !

* * *

கே. ஆர். கூஜா, பச்சையப்பன்
பள்ளி சென்னை–1.

ஐயா தென்றலாரே ! காதலுக்கும் காமத்துக்கும் உள்ள பேதம் என்ன ?

வாசத்திற்கும் நாற்றத்திற்கும் உள்ள பேதம்தான். இரண்டுக்கும் ஒரே பொருள்தான், பின்னுளில் காதல் என்பது புனிதம் என்றும் காமம் என்பது மிருக இச்சை என்றும் கூறப்பட்டது. ஆனால் உண்மையில் இரண்டுக்கும் ஒரே பொருள் தான். வள்ளுவன் காதற்பகுதிக்கு 'காமத்துப்பால்' என்ற பெயர் தந்ததற்குக் காரணம் இதுதான்.

இரா. இளங்கண்ணன், பீமநகர் ;
திருச்சி.

விஸ்வாமித்திரரை வீழ்த்தியவள், கம்பன் கையிலே சிக்கியிருந்தால்—? வள்ளுவனிடம் அகப்பட்டிருந்தால் ? என்ன ஆகியிருக்கும் ?

கம்பனிடம் அகப்பட்டிருந்தால், ''போதும்சாமி!'' என்று துவண்டு போயிருப்பாள். வள்ளுவனிடம் அகப்பட்டிருந்தால் சிலையாகச் சமைந்து போயிருப்பாள்.

* * *

பி. பரந்தாமன், கோவை.

''ரயிலில் மெயிலில் ராத்திரி வண்டியில் இஞ்சினின் முன்னால் இருட்டை விரட்டும் இரண்டு விளக்குகள் இருப்பதுபோல இரண்டு கண்களும் அவனையே பார்த்தன'' என்று பாடுகிறார் நாமக்கல் கவிஞர். இஞ்சினுக்கு முன்னால் இரண்டுவிளக்குகள் உண்டா ? ஒரு பெண்ணின் கண்களை அப்படி உவமையாக்கலாமா?

இஞ்சின் விளக்கு என்ன், அவரைக் கவிஞராக்கி, ஆஸ்தான கவியாகவும் மாற்றியவர்கள் ரசிக்கும்படிக்கு, இனிமேல் பெட்ரோமாக்ஸ் விளக்கு என்று கூடச்சொல்லுவார் ! கேட்பவனுக்குபுத்தியில்லையே! கேழ்வரகிலும் நெய்கூட வடியும்! அவரது கவிதைகளைவைத்து ஒரு முழு விளக்கமே தருகிறேன்; கொஞ்சம் பொறும் !

* * *

நான் ஏதாவது கூறி அவசரப்பட்டால், என் நண்பர் "ஏனையா பறக்கிறீர் ?" என்கிறார். "பறக்கிறீர் !" என்று ஏன் குறிப்பிடுகிறார்கள். பறப்பது அவசரத்தைக் குறிக்குமா ?

அது, வழக்கிலே, அவசரத்தைக்குறிப்பிட ஏற்பட்ட ஒரு வார்த்தை ! இப்படித்தான் ஒரு புலவனை, மன்னன் ஒருவன் பார்த்து "ஏனையா பறக்கிறீர்! என்றானும். உடனே புலவன் "**கொக்குப்பறக்கும் குயில் பறக்கும் குருவி பறக்கும் புரு பறக்கும், நக்குப் பொறுக்கிகளும் பறப்பர். நானேன் பறப்பேன் நராதிபனே !**'' என்றானும் !

ஆண்டு சந்தா ரூ. 6
6 மாத சந்தா ரூ. 3

தென்றல்

புதிய முகவரி

தென்றல்

13, நல்லண்ண முதலி தெரு,
சென்னை-14.

சென்னை 17-வது வட்டம்
சூளையில்

10-10-54-ந்தேதி யன்று
லட்சுமி தியேட்டரில்
காலை 6-மணிக்கு

பாண்டியன் படிப்பகம்
சார்பில் கூட்டம்
நடைபெறும்.

''விடுதலை வாழ்வு''
என்பதுபற்றி
சொல்லின்செல்வர்
ஈ. வெ. கி. சம்பத்

''நம்பத்தகுந்தவட்டாரங்கள்''
என்பதுபற்றி
கண்ணதாசன்

''நடிகனும் கலையும்''
என்பதுபற்றி
கே. ஆர். ராமசாமி
ஆகியோர்

சொற்பொழிவாற்றுவர்
கட்டணம் 4 அணா.

எமது புதிய வெளியீடு

அறிஞர் அண்ணாதுரை, M·A·
அவர்களின்

கலிங்கராணி

விலை ரூ. 3–0–0.

திராவிடப்பண்ணை

தெப்பக்குளம் : : திருச்சி.

வருகிறது !

வணங்காமுடி

வாரப் பத்திரிகை

தனி இதழ் அணா ஒன்று !

- சுவையான பல பகுதிகள்
- யாவருக்கும் பிடித்தமான விஷயங்கள்.
- சொல்லழகு! பொருட்செறிவு!
- இன்னும் எத்தனையோ புதுமைகள் !

ஆசிரியர் ; வணங்காமுடி

எழுதுக:— **வணங்காமுடி**
சென்னை-14.

ஈ.வி.கே.சம்பத் சொல்லுகிறார்

வர வர இராணிக்கு இந்த நடனங்களும் சலித்தன. புதுமையை விரும்பினாள். அவளது ஆசைகள் நிறைவேறும் வகையில் முகமூடி நடனங்கள் (MaskedBalls) அமைந்தன. இவ்வகை நடனத்தில் அனைவரும் ஆளடையாளம் தெரியாமல் முகமூடி அணிந்துகொண்டிருப்பார்கள்; இம்முறை இராணிக்குப் பெரிதும் பிடித்திருந்தது. ஏனெனில், தனது கணவனால் தர இயலாததைப் பெறவே அத்தையல் விருந்து விருந்தென அலைந்துகொண்டிருந்தாள் முகமூடி யணிந்துகொள்வதன் மூலமே, விருந்தில் கலந்துகொள்ளும் சாதாரண சீமாட்டிகள் நுழைந்து நுழைந்து வெளியேறும் இன்பத்துறைகள் அனைத்திலும் தானும் நுழைய முடியும் என்பதை கண்டுகொண்ட மேரி முகமூடி நடனங்களுக்குத் தனது ஆதரவை அளிக்க முன்வந்தாள். சாதாரண நடனங்களின்போது, அங்கு வரும் ஆணழகர்கள் அளவோடும், அச்சத்தோடும், மரியாதையோடும் சற்றுத் தொலைவிலிருந்தபடியே அரசியுடன் அளவளாவினர். அரசிக்கு இது விஷயத்தில் இருந்த பெரும் மனக்குறையை முகமூடி நடனங்கள் போக்கின. நடனக் கூடத்தில் அரசியின் மனக்குறை முழுதும் நீங்கியது. ஆனால் இந்நடனங்களின் விளைவாக தெருச் சந்துகளில் அவள் மானமே போயிற்று. முகமூடி நடனங்களின்போது நடனமாடுவோர் அத்துமீறிய செயலில் ஈடுபடுவார்கள். சிலசமயங்களில், ஆபாசமான நிலையில் அரசியின், அடையாளம் வெளியாகிவிடுகின்றன. உடனே வதந்திகள் 'பேயுருவில்' நாட்டில் நடமாடத் தொடங்கிவிடும்.

அரசி மேரியின் அண்ணன், ஆஸ்திரியாவின் அரசன் ஜோசப், 16-ம் லூயி பட்டம் சூட்டிக்கொண்டதும் பிரான்ஸுக்கு வந்து சில நாட்கள் அங்கு தங்கினான். அந்த ஆரம்ப நாட்களில் அரசிக்கு மக்களிடம் மதிப்பு மிகுந்திருந்தது. ஆகவே பிரஞ்சு மக்கள் ஆஸ்திரிய அரசன் ஜோசப்புக்கு ஆடம்பரமான வரவேற்பளித்தனர். இப்போது அரசி மக்களின் வெறுப்புக்குள்ளானதும் அவளது அண்ணனின் அந்த வருகையைப்பற்றி நாட்டில் பலத்த சந்தேகம் உருவாயிற்று. தங்கையின் மூடிசூட்டு விழாவுக்கு வந்தானா, அல்லது பிரான்ஸில் உளவு பார்க்க வந்தானா, என்ற கேள்வி கிளம்புகிறது. இந்தக் கேள்வி அரசியின் நாட்டுப்பற்றையே சந்தேகிக்கும் எண்ணத்தின் விளைவாகும். அத்துடன் அரசி புகுத்திய சில 'நாகரீகங்கள்' (Fashions) பிரான்ஸின் கைத்தொழில்களைப் பெரும் அளவுக்குப் பாதித்தன. வெளிநாட்டு மஸ்லின் ஆடைகளையும், லினன் ஆடைகளையும், அரசி அணிய ஆரம்பித்தாள். அனைவரும் அவளைப் பின்பற்றினர். பிரான்ஸில் லையான்ஸ் (Lyons) நகரில் பெருந்தொழிலாய் வளர்ந்திருந்த பட்டுத்துணி நெசவுத்தொழில் படுத்துப் போயிற்று. அரசியின் ஆடம்பரச் செலவுகள், ஒழுக்கங்கெட்ட நடத்தைகள், நாட்டு நலத்தைப் பாதிக்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றில் மக்களுக்கேற்பட்ட வெறுப்பின் காரணமாக அவளை அந்த 'ஆஸ்திரியக்காரி' என்று இழிவாக அழைக்கத் தொடங்கினர்.

அவளுக்கு ஆண் குழந்தை பிறந்த உடன் மன்னனிடம் அவளது செல்வாக்கு மிகவும் உயர்ந்தது. ஆட்சிப் பொருப்பில் அவளது கரம் வலுத்து நின்றது. இந்த நிலை பிரஞ்சு மக்களிடையே பெரும் பீதியைக் கிளப்பிவிட்டது, மந்திரிகளைப் பதவியிலிருந்து விரட்டவும், விரும்பியவர்களை அமைச்சர்களாக்கவும் அவளால் முடிந்தது. மந்திரிசபைக் கூட்டங்கள் அவளில்லாமல் நடைபெறுவதில்லை. அவளது செருக்கும், துணிவும் மிகப் பயங்கரமான உச்சத்தை யடைந்தன. எத்தகைய எதிர்ப்புக்கும், புயலுக்கும் அவள் பணிய மறுத்தாள்.

இந்தச் சமயத்தில்தான்—1785–ஆம் ஆண்டில், 'வைர மாலைப் புரளி' (The Scandal of the Diamond—Necklace) பிரான்ஸில் கிளம்பி அரசியின் அந்தரங்க வாழ்க்கையின் அலங்கோலங்களை அம்பலமாக்கி, அவளை மக்ளின் பெரு வெறுப்புக்கு ஆளாக்கியது.

அரண்மனைப் பொற்கொல்லன் பொய்மர் (Boehmer) ஒரு அபூர்வமான வைர மாலையைச் செய்து முடிக்கிறான். அதன் மதிப்பு 64,000 பவுன்கள் (சுமார் 8,32,000 ரூபாய்கள்) ஆகிறது. இதை அவன் அரசியிடம் விற்க முயன்று தோல்வி காண்கிறான். பின் வேறு ஐரோப்பிய அரண்மனைகளிலும் விற்க முயலுகிறான். வெற்றி கிடைக்கவில்லை. மாலை அவன் கையிலேயே தங்கிவிடுகிறது.

இச்சமமத்தில், அரண்மனையில் அரசியின் 'அறமன்றத் தலைவர்' பதவியில் (The Grand Almoner) ரோஹன் என்ற மதக் குரு (Cardinal) அமர்த்தப்படுகிறார். எவரிடத்தும் மிதமிஞ்சிய 'அன்போடு' நடந்துகொள்ளும் அரசி தன்னிடம் மிக்க அளவோடு நடந்துகொள்வது, குருவுக்கு பெரிய மனக்குறையாயிருந்தது. ஆகவே, அவர் அரசிக்கு 'மிகவும் வேண்டிய' ஒரு தோழியான மேடம் டி லா மோட்டி (Madam de la motte) என்பவளை அணுகித் தன்னை அரசிக்கு 'சிபாரிசு' செய்யுமாறு கெஞ்சுகிறார். அவளும் அதன்படியே சிபாரிசு செய்ததாகவும் அரசியும் தம் வழிக்கு வந்துகொண்டிருப்பதாகவும் குரு தனக்குக் கடிதம் எழுத அரசி அனுமதி அளித்துவிட்டதாகவும் தெரிவிக்கிறாள். குருவானவர் ஆவல் ததும்பும் காதல் விண்ணப்பங்களை எழுதிக் குவிக்கிறார். அவள் மூலம் அரசிக்கு (?) அனுப்புகிறார். அவளும் சில பதில்களை அரசியிடமிருந்து (?) கொண்டுவந்து சேர்க்கிறாள்.

ஒரு நாள், குருவுக்கு இஷ்டபூர்த்தி! தன்னை, நள்ளிரவு மணி 12-க்கு அரண்மனைப் பூங்காவில் வந்து சந்திக்குமாறு எழுதியுள்ள அரசியின் கடிதத்தைத் தாதி குருவிடம் தருகிறாள்! குரு சந்தோஷத்தால் துள்ளிக் குதிக்கிறார்! பலகாலம் எதிர்பார்த்த 'அந்த நாளும்' வந்துவிட்டது! சர்வாலங்கார பூஷிதராய் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த நேரத்திற்குப் பூங்காவில் குரு காத்திருக்கிறார். பூங்காவுக்கு வரும் அரண்மனை வாயிற் கதவு திறக்கப்படுகிறது. கரத்தில் நீண்ட காம்புள்ள ரோஜா மலரை ஏந்திய வண்ணம். கருப்புக் கவுன் அணிந்த ஓர் உருவம், வாயிலிலிருந்து நெடிய படிக்கட்டுகளில் ஓயிலுடன் இறங்கி வருகிறது. 'ஆம்! ராணிதான். சந்தேகமில்லை.' குரு நிச்சயித்துக் கொண்டார். பட பட வென்று அடித்துக்கொள்ளும் நெஞ்சத்துடன், இறங்கிவரும் 'அரசியைச்' சந்திக்க படியருகே ஓடுகிறார். அச்சமயம் யாரோ சிலர் வரும் சந்தடி கேட்கிறது. குருவும் 'அரசியும்' திடுக்கிடுகின்றனர். குருவை நாடி இறங்கி வந்து கொண்டிருந்த அந்த உருவம்—இல்லை. அரசி (!) மீண்டும் படியேறி வாயிலை நோக்கி விரைகிறாள். வந்த வழியே மறையுமுன் கரத்திலிருந்த ரோஜாவை உதட்டில் வைத்து ஒலி கிளம்ப முத்தமிட்டுப் பின் தூக்கி குருவிடம் அந்த உருவம் எறிந்துவிட்டு மறைந்து விடுகிறது. அந்தோ, பரிதாபம்! இன்னும் ஒரு கணம். 'தொல்லை' தாமதித்திருந்தால். அரசியின் அணைப்பிலே குரு.... முன்பு காட்டிய அலட்சியத்துக்கு மன்னிப்பு கோரும் வகையில் எத்தனை முத்தங்கள் ஈந்திருப்பாள்? என்னென்ன பேசியிருப்பாள்? இனி உயிருள்ளவரை எனக்கு நீ. உனக்கு நான்...நிலா சாட்சி.

[அடுத்த இதழில் முடியும்.]

Edited and Published by Kannadhasan, 13, Nallanna Mudali Lane, Madras 14; and Printed by U. Ramasvamy at
[redacted]